மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children’s Voices for Human Rights


Source: Frontline, 23 August 2013


Source: http://worldpress.org/Asia/3218.cfm


Source: http://www.washingtonpost.com


Source : The Hindu, 25 August 2013

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் – 67 – 2013

# ஒரு கொள்கையாகவே ஒதுக்கப்படும் மக்கள்

**உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் அனைவருக்கும் பொதுவான பொது விநியோக முறை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அநேகமாக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கின்றன. இதனால், இந்த சட்டமுன்வரைவை நிறைவேற்ற அவசரச் சட்ட வழியை பின்பற்ற காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூ. அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன**

**– டி.கே. ராஜலட்சுமி**

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு வரும் 2014ம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்ட முன்வரைவு (என்.எஃப்.எஸ்.பி.) – 2013 ஒரு மிகப்பெரிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கணக்குப் போடப்படுகிற நிலையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரிலோ அல்லது ஒரு சிறப்புக் கூட்டத் தொடரிலோ தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக, இந்த சட்டமுன்வரைவு குறித்து மற்றொரு சுற்று விவாதங்கள் நடைபெறக்கூடும். இந்த சட்ட முன்வரைவு மத்திய அமைச்சரவையால் மார்ச் 19 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் மார்ச் 22 அன்று பட்ஜெட் கூட்டத் தொடரின் போதே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. 67 சதவீத மக்களை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ள இந்த சட்டம், முன்னுரிமைக்குரிய குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு, ஒரு நபருக்கு 5 கிலோ அல்லது ஐந்து பேர் கொண்ட ஒரு சராசரிக் குடும்பத்திற்கு மாதம் 25 கிலோ உணவு தானியத்தை வழங்க வழி செய்கிறது.

அவசர சட்டத்தின் வடிவத்தில் இதனை நிறைவேற்ற காங்கிரஸ் பல முறை மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. காரணம், அதன் கூட்டாளிகளான தேசியவாத காங்கிரஸ் கட்சி, ராஷ்டிரிய லோக்தல், தேசிய மாநாடு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஐ.மு.கூ. அரசை வெளியிலிருந்து ஆதரிக்கும் சமாஜ்வாதி கட்சி இந்த சட்டமுன்வரைவுக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன் இது விவசாயிகளுக்கு விரோதமான சட்டம் என்றும் கூறியுள்ளது. அவசரச் சட்ட வழிமுறையைப் பயன்படுத்துவது குறித்து மத்திய அமைச்சரவைக்கு உள்ளேயே கூட கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஜூன் 13 அன்று உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷின்டே, நாடாளுமன்ற அலுவல்கள் துறை அமைச்சர் கமல்நாத், உணவு மற்றும் குடிமைப் பொருள்கள் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. சட்டமுன்வரைவை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றத்தின் ஒரு சிறப்புக் கூட்டத்தை கூட்டுவது குறித்து பொதுக் கருத்தை



உருவாக்க எதிர்க்கட்சிகளோடு பேச்சு நடத்துவதற்காக என இந்த மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. மத்திய அரசு 55 திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறது. நாடாளுமன்ற நிலைக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையிலும், இதோடு தொடர்புடைய பலரும் வெளிப்படுத்திய கருத்துகளின் அடிப்படையிலும் அந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக அரசு கூறியது. ஒரு பகுதி மக்களை தானாகவே ஒதுக்கி வைக்கிற வகைப்பாடு பொது விநியோக முறையிலிருந்து கணிசமான மக்களை ஒதுக்கி வைக்கிறது. கிராமப் பகுதிகளில் 25 சதவீதத்தினரும், நகர மக்களின் 50 சதவீதத்தினரும் ஒதுக்கப்படுவார்கள்.

முன்னுரிமைப் பிரிவினர், பொதுவான வகைப்பாடுகள் ஆகியவை இந்த சட்ட முன்வரைவில் நீக்கப்பட்டுள்ளன. அதன் மூலம், இது அனைவருக்கும் பொதுவான சட்டம் என்ற ஒரு தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. ஒரே மாதிரியாக ஒரு நபருக்கு 5 கிலோ உணவு தானியம் வழங்குவதற்கு ஏற்ப சட்ட முன்வரைவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 3 கிலோ அரிசிக்கு ரூ.3 என்ற விலையும் 2 கிலோ கோதுமைக்கு ரூ.2 என்ற விலையும், ஒரு கிலோ மோட்டா ரக தானியத்திற்கு ரூ.1 என்ற விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 67 சதவீத மக்களுக்கு (கிராமங்களில் 75 சதவீதம், நகரங்களில் 50 சதவீதம்) மக்களுக்கு கிடைக்கும். மிக வறிய (அந்த்யோதயா) குடும்பத்திற்கு மாதம் 35 கிலோ தானியம் வழங்குவதில் மாற்றம் இல்லை. மிக முக்கியமான இந்தச் சட்டத்தை எதிர்க்கட்சிகள் பிடிவாதமாக முடக்குகின்றன என்று அரசு குற்றம்சாட்டியது. நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென் போன்ற மரியாதைக்குரிய தனி நபர்களின் ஆதரவையும், சில 'குடிமைச் சமூக' அமைப்புகளின் ஆதரவையும் திரட்டி, தற்போதை வடிவத்திலேயே நிறைவேற்றுவதற்கும் கூட அரசு முயன்றது. ஆயினும், அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

மானிய விலையில் உணவு தானியம் பெறும் உரிமையை சட்டப்பூர்வமானதாக ஆக்குவதற்கான இந்தச் சட்டம், தனக்கே உரிய தனித்துவம் வாய்ந்தது என்பதால் இது விரிவானதாக இருப்பது அவசியம். ஆனால், கணிசமான பகுதி மக்களை ஒதுக்கி வைப்பதற்கான வகைப்பாடுகளைக் கொண்ட இந்தச் சட்டம், தற்போதைய வடிவத்தில், விரிவானதாக இல்லை.

### குறைப்பதற்கான விதி:

இந்தச் சட்ட முன்வரைவின் நோக்கம் "மக்கள் ஒரு மரியாதையான வாழ்க்கையை வாழ்வதற்காகவும் அதனுடன் தொடர்புள்ள மற்ற அம்சங்களுக்காகவும் போதுமான அளவில் தரமான உணவை கட்டுப்படியாகும் விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் மனித வாழ்க்கைச் சக்கர அணுகுமுறையில் உணவுக்கும் ஊட்டச்சத்திற்கும் உத்தரவாதம் அளிப்பது" என்று இருந்தாலும், உணவு அளவை ஒவ்வொரு தனி நபருக்கும் 5 கிலோவாக குறைப்பதற்கான விதி, உணவுக்கான உத்தரவாதத்தை வழங்கவில்லை. பிறகு எங்கே இருந்து ஊட்டச்சத்து உத்தரவாதம் வரும்? தானியங்களுக்கு அப்பால் வேறு பல உணவுப் பொருள்களும் கிடைத்தால்தான் ஊட்டச்சத்து கிடைக்கும். இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (ஐ.சி.எம்.ஆர்.) ஊட்டச்சத்துக்கு பரிந்துரைத்துள்ள அளவைவிட, 5 கிலோ என்பது மிகக் குறைவாகும். பெரியவர்களுக்கு தலைக்கு 14 கிலோ, குழந்தைக்கு 7 கிலோ என்பதுதான் ஐ.சி.எம்.ஆர். பரிந்துரை. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் 35 கிலோவிற்கு குறைவாக வழங்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணைக்கும் இது முரணாக உள்ளது. இந்தப் பிரிவு மக்கள் தொகையில் 10 சதவீதத்தினரை அதாவது, அந்த்யோதயா திட்டத்தின் கீழ் வரும் மக்களை மட்டுமே சென்றடைகிறது.

இந்த சட்ட முன்வரைவில் இருப்பதை விட சிறப்பான அம்சங்களுடன் பல மாநிலங்களில் ஏற்கெனவே உணவு உத்தரவாத திட்டங்கள் இருக்கின்றன. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வன உரிமைகள் சட்டம் போன்ற முக்கியமான நலத் திட்டங்களை ஐ.மு.கூ. அரசு கொண்டுவர முக்கிய காரணமாக இருந்த இடதுசாரி கட்சிகள் இந்த சட்ட முன்வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. திருத்தங்கள் கொண்டுவர அவர்கள் திட்டமிட்டுள்ளனர். தொடக்கத்தில் இந்த சட்ட முன்வரைவை எதிர்க்காத பாரதிய ஜனதா கட்சி இப்போது திருத்தங்களை வலியுறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுவது "ஜனநாயக விரோதமானது" என்று பாஜக தலைவர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். பிஜு ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளும் திருத்தங்களை முன்மொழியப் போவதாக அறிவித்துள்ளன. சத்தீஸ்கர் மாநில பாஜக அரசின் முதலமைச்சர் ராமன் சிங், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், வேறு பல ஆலோசனைகளோடு, உணவு தானியம் வழங்குவதை ஒரு தனி மனிதருக்கு என்ற அடிப்படையில் அல்லாமல் ஒரு குடும்பத்திற்கு என்ற அடிப்படையில் மாற்ற வேண்டும் என்ற ஆலோசனையைக் கூறியுள்ளார். இதனைப் பெறத் தகுதியுள்ள குடும்பங்களுக்கான வரம்பை உயர்த்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். உணவு, நுகர்வோர் நலன் மற்றும் பொது விநியோகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழு அந்தந்த மாநிலம் சார்ந்த விலக்கல் வகைப்பாட்டை, மாநில அரசுகளோடு கலந்தாலோசித்து வெளிப்படையான முறையில் உருவாக்க வேண்டும் என்றும், திட்டத்திலிருந்து ஒதுக்கி

வைக்கப்படும் மக்களின் எண்ணிக்கை கிராம அளவில் 25 சதவீதத்திற்கும், நகர அளவில் 50 சதவீதத்திற்கும் மேல் போய்விடக்கூடாது என்றும் பரிந்துரைத்திருப்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த பரிந்துரையில் ஒரு பகுதி சட்டமுன்வரைவில் சேர்க்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால், கூட்டாட்சி கொள்கைகளை எண்ணிப் பார்க்கிறபோது, அதில் அத்துமீறல் இருப்பதாகவே தெரிகிறது.



*Source: The Hindu, 8.7.201*

**மாநில அரசுகளின் தயக்கம்:**

ஏற்கெனவே சிறப்பான ஏற்பாடுகளையும், அதிகமான மக்களுக்கு உணவு தானியங்கள் கிடைப்பதற்கான நடைமுறைகளையும் கொண்டுள்ள மாநில அரசுகள் இந்த சட்ட முன்வரைவு குறித்து தங்களுடைய மாற்றுக் கருத்துக்களை தெரிவித்துள்ளன. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக முறையின் கீழ் கிராமங்களிலும் நகரங்களிலும் உணவு தானியம் விநியோகிக்கப்பட வேண்டிய மக்களின் சதவீதம் எவ்வளவு என்று மத்திய அரசுதான் தீர்மானிக்கும், மொத்தம் எத்தனை பேருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இருக்கும் என்று சட்டமுன்வரைவில் இருப்பதை அந்த மாநில அரசுகள் ஏற்கவில்லை. திட்டத்திலிருந்து ஒதுக்கப்படுபவர்களை வகைப்படுத்துவது என்பது ஒவ்வொரு மாநில அரசாலும் சமூகப் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்று ராமன் சிங் வலியுறுத்தியுள்ளார். பிரதமருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், ‘‘மாறாக, ஒரு மாநிலத்தில் ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேர் என்ற அளவு, அந்த மாநிலத்தின் சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கணக்கில் கொண்டே முடிவு செய்யப்பட வேண்டும்,’’ என்று கூறியுள்ளார். தலைக்கு இவ்வளவு என்ற அளவின் காரணமாக, ஐந்து பேருக்கும் குறைவானவர்களைக் கொண்ட ஏராளமான ஏழைக் குடும்பங்களுக்கு கிடைத்து வரும் தானிய அளவு குறைந்துவிடும். ‘‘இத்தகைய ஏழைக் குடும்பங்களுக்கு உணவை உத்தரவாதப்படுத்துவது என்பதை இது சீர்குலைத்துவிடும். ஆகவே, ஒரு குடும்பம் என்ற அடிப்படையில்தான் தானிய அளவு நிர்ணயிக்கப்பட வேண்டுமேயன்றி தலைக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் அல்ல,’’ என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒருவருக்கு 5 கிலோ அரிசி என்ற மிகக் குறைந்த அளவு, அர்த்தமுள்ள வகையில் உணவுப் பாதுகாப்பு என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதுமானது அல்ல என்று அவர் வாதிட்டுள்ளார். ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் மாதம் 35 கிலோ தானியம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். இதே நிலைபாட்டைத்தான் இடதுசாரி கட்சிகளும் மேற்கொண்டுள்ளன. எனினும் அவர்கள், திட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுபவர்கள் என்ற பிரிவு இல்லாத, அனைவருக்கும் பொது விநியோக முறை என்பதையே அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பிருந்தா காரத் கூறியிருப்பது வருமாறு: ‘‘அவசரச் சட்டத்தின் மூலமாக இதைச் செயல்படுத்த அரசு முடிவு செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. நாங்கள் அதை எதிர்த்திருக்கிறோம். நான்காண்டு காலமாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகாலமாக இந்திய உணவுக் கழக கிட்டங்குகளில் 6 கோடி டன் உணவு தானியங்கள் அழுகிப்போயிருக்கின்றன, அதுகுறித்து அரசாங்கம் கவலைப்படவில்லை. ஆனால், இப்போது ஒரு மாத காலத்திற்குக் கூட காத்திருக்க அவர்கள் தயாராக இல்லை. இந்த சட்டமுன்வரைவில் இருக்கிற பிரச்சனை என்னவென்றால், ஒரு பகுதி மக்களை தானாகவே தள்ளி வைக்கிற ஒரு வகைப்பாட்டை வைத்துக்கொண்டு நகரங்களின் 50 சதவீத மக்களை இது ஒதுக்கி வைக்கிறது என்பதுதான். நகர்ப்புற ஏழை மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் காலகட்டத்தில், முறைசாரா தொழில்களைச் சார்ந்த பெரும்பாலான தொழிலாளர்கள் வருமான உத்தரவாதமின்றி இருக்கும் நிலையில், இப்படி தானாகவே ஒதுக்கி வைக்கும் ஏற்பாடு என்பது

கொஞ்சமும் நியாயமற்றது. அதேபோல், கிராமப் பகுதிகளில், 25 சதவீத மக்கள் இப்படி தானாகவே தள்ளி வைக்கும் ஏற்பாட்டில் ஒதுக்கப்படுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் ஏற்கெனவே இலக்கு நிர்ணயித்து வழங்குகிற கேடுகெட்ட ஏற்பாடுதான், இப்போது இந்த சட்டமுன்வரைவின் அடிப்படையாக உருவெடுத்திருக்கிறது, அது இப்போது சட்டப்பூர்வமாகிறது.''

மத்திய – மாநில அரசுகளுக்கிடையே, செலவை பகிர்ந்துகொள்ளும் ஏற்பாடுகளும் பிரச்சனைக்குரியதாக உள்ளன என்கிறார் அவர். ''நான் தீர்மானிக்கிறேன், நீ பணம் கொடு'' என்ற அடிப்படையில் இந்த ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றார் அவர். செலவைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறைகள் அனைத்தும் மாநில அரசுகளோடு கலந்தாலோசித்தே வகுக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு திருத்தத்தைக் கொண்டுவர மார்க்சிஸ்ட் கட்சி திட்டமிட்டுள்ளது. கேரளம் போன்ற மாநிலங்களில், பொது விநியோக முறையின் கீழ் மாதம் 35 கிலோ தானியம் பெறுகிற குடும்பங்களுக்கு, தலைக்கு இவ்வளவுதான் என்ற விதி அநீதி இழைப்பதாகும். பொது விநியோக முறையில் நேரடி பணப்பட்டுவாடாவைக் கொண்டு வரும் முடிவையும் இடதுசாரி கட்சிகள் எதிர்க்கின்றன. இது பொது விநியோக முறையையே கைவிடுவதற்கான, வெளிச் சந்தையிலிருந்து தானியங்களை வாங்கும் நிலைக்கு மக்களைத் தள்ளுவதற்கான ஒரு சூழ்ச்சிதான் என்று இடதுசாரி கட்சிகள் விமர்சித்துள்ளன. பொது விநியோகத்திற்கான தானியக் கொள்முதல் அளவு குறையும் என்பதால், அது விவசாயிகளையும் பாதிக்கும் என்று இக்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

### அனைவருக்கும் பொதுவான முறையை வலியுறுத்தும் இடதுசாரிகள்

ஐ.சி.எம்.ஆர். வரையறுத்துள்ள கலோரி அளவின்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 35 கிலோ உணவு தானியம் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், அனைவருக்கும் பொதுவான சீரான பொது விநியோகம் முறை என்பதற்குக் குறைவாக எதையும் ஏற்கப் போவதில்லை என்று இடதுசாரி கட்சிகள் கூறுகின்றன. இந்த சட்டமுன்வரைவில் ஆக்கப்பூர்வமான அம்சம், 2 குழந்தைகளுக்கு மேல் உள்ள குடும்பங்கள் விலக்கி வைக்கப்படும் என்ற விதி கைவிடப்பட்டிருப்பதாகும். கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் உள்ளூர் அங்கன்வாடி மையங்களில் இலவச உணவும், ரூ. 6 ஆயிரத்திற்குக் குறையாமல் பேறுகால உதவி நிதியும் கிடைக்கும் என மத்திய அரசு முன்மொழிந்திருப்பதும் ஆக்கப்பூர்வமான அம்சங்கள்தான். சட்டம் அமலாக்கப்படுவதற்கான காலகட்டம் இந்த புதிய சட்டமுன்வரைவில் நிர்ணயிக்கப்படவில்லை. கைவிடப்பட்டவர்களுக்கும், பட்டினியால் வாடுவோருக்கும் சமூக சமையல் கூடங்கள் அமைப்பதும் என்ற நோக்கமும் இந்த சட்டமுன்வரைவில் கைவிடப்பட்டிருக்கிறது.

**ஆதாரம்: ஃபிரன்ட் லைன் ஜூலை 12, 2013**

## உணவு பாதுகாப்பு மசோதா மக்களவையில் நிறைவேறியது

**நாட்டில் உள்ள 82 கோடி மக்களுக்கு உணவு தானியங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.**

*பசி மற்றும் சத்துக்குறைவு நீக்கப்படும் என்ற அவரது கட்சியின் வாக்குறுதி இந்த மசோதா மூலம் நிறைவேற்றப்படுவதாக சோனியா கூறினார்.*

வரலாற்றுச் சிறப்புமிக்கதும், நாடு முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதுமான உணவுப் பாதுகாப்பு மசோதா 2013ஐ மாநிலங்களவை திங்கள் இரவு நிறைவேற்றியது. மானிய விலையில் உயர்தர உணவுப் பொருட்களை நாட்டின் 70% மக்களுக்கு வழங்க இந்த மசோதா உத்தேசித்துள்ளது.

'தேர்தல் நோக்கத்துடன்' கொண்டு வரப்பட்டுள்ளது என்று விமர்சிக்கப்படுகிற ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் கனவுத் திட்டமான இது 67 சதவீத மக்களுக்கு (75 சதவீத கிராமப்புற மக்கள் மற்றும் 50 சதவீத நகர்புற மக்கள் உள்ளிட்ட) இலக்கு நோக்கிய பொது விநியோக முறை (PDS) என்ற முறையின்கீழ் மானிய விலையில் தானியங்களை சட்டபூர்வமாக அளிக்கும். இதன் மூலம் ஒரு பயனாளிக்கு, 5 கிலோ அரிசி (ரூ.3), கோதுமை (ரூ.2) அல்லது பருப்புகளை (ரூ.1) ஒரு கிலோவிற்கு என்ற விலையில் அளிக்கும். பயனாளிகள் மத்திய அரசால் வழங்கப்பட்ட அளவு கோல்களின் அடிப்படையில் மாநில அரசால் கண்டறியப்படுவார்கள். இது குறித்த தற்காலிக மசோதாவை ஜூலை மாதத்தில் அரசு அறிமுகப்படுத்தியது. இது சட்டமாக, பாராளுமன்றத்தின் நடப்பு குளிர்காலக் கூட்டத்தொடரில் விவாதத்திற்கு வைக்கப்பட்டது. இந்த மசோதாவில் பல்வேறு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட பல திருத்தங்கள் குறித்து 6 மணி நேரம் விவாதம் நடைபெற்றதால் மக்களவை இரவுவரை நீடித்தது.

**ஆதாரம்: *The Hindu*, 27 ஆகஸ்ட் 2013**

# பயிற்று மொழி சர்ச்சைகள் தேவையா?

– எஸ்.எஸ். ராஜகோபாலன்

அரசுத் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. தமிழார்வலர்கள், கல்வியாளர்கள், அரசியல் கட்சிகள் மௌனம் சாதிப்பது எதனால் என்று புரியவில்லை.

குருகுல முறையை ஒழித்து பள்ளி முறையை நம் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய மெக்காலே பிரபு தனது வரலாற்றுப் புகழ் பெற்ற குறிப்பில் சொன்னார்: நிறத்தாலும் இரத்தத்தாலும் இந்தியர்களாகவும் எண்ணங்கள், ஒழுக்க முறைகள், அறிவு மற்றும் விருப்பங்களாலும் ஆங்கிலேயர்களாக வாழ்ந்திடும் ஒரு இனத்தவரை உருவாக்கி ஆங்கில மொழியின் வாயிலாக உருமாற்றம் (Proselytise) செய்திட வேண்டும். மெக்காலேயின் கனவை 150 ஆண்டுகளுக்கு மேலாக நம்மை ஆண்ட ஆங்கிலேயரால் நிறைவேற்ற முடியவில்லை. ஒரே நொடியில் தமிழக அரசு மெக்காலேயின் கனவை நனவாக்க முற்பட்டுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றி அங்கு வாழ்ந்த மக்களைக் கொன்றும் அவர்கள் மொழி உள்ளிட்ட அனைத்துக் கலாச்சார அடையாளங்களையும் காணாமல் செய்த ஆங்கிலேயரால் நம் நாட்டில் அத்தகைய வெற்றியைப் பெற இயலாததற்கு நமது பல்லாயிரம் ஆண்டு பின்புலமே காரணம். நாம் காலத்தை வென்ற பெருமைக்குரியவர்கள் இன்று நமது அடையாளத்தைத் தொலைக்க முன் வந்துள்ளோம்.

விடுதலை பெற்ற காலத்தில் ஆசிரியர் சங்க மாநாடுகளில் முதல் தீர்மானமாக அமைவது உயர்கல்வியும் தமிழ்வழியில் வழங்கப்பட வேண்டுமென்பதே. அது நீர்த்துப்போய் தொடக்கக் கல்வியாவது தமிழ் வழியில் வழங்க வேண்டுமென்று ஆயிற்று. இன்று அந்நிலையும் இல்லாது சங்கங்கள் அமைதி காக்கின்றன. இரு மொழித் திட்டத்தின்படி இரண்டாம் மொழியாகிய ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டும், முதன் மொழியாகத் தமிழோ வேறு எந்த மொழியோ என்றானதால் தமிழைத் தவிர்க்கும் போக்கு அதிகரித்தது. எனவே, தமிழைக் கட்டாயம் கற்க வழி செய்ய கோரிக்கை வைக்கப்பட்டுத் தொடக்கக் கல்வி நிலையில் தமிழ் கட்டாய முதன் மொழியாக ஆக்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் செல்லாது என்ற உயர்நீதிமன்றத்தின் மீது தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் செய்துள்ள மேல்முறையீட்டின் மீது இறுதித் தீர்ப்பு பெற எம்முயற்சியும் எடுக்கப்படவில்லை. அச்சட்டமே கண்துடைப்போ என்று ஐயுற வைக்கின்றது. ஆனால், பயிற்று மொழிப் பிரச்சனை பின்னுக்குத் தள்ளப்பட்டது.

சமீபத்தில் சமூகப் பார்வை கொண்ட ஒரு அமைப்பு நடத்திய மாநிலக் கல்வி மாநாட்டில் பயிற்று மொழி ஆய்வரங்கத்தில் பங்கு பெற்றேன். அனைவரும் தாய்மொழி வழிக் கல்வியை ஆதரித்துப் பேசுவார்கள் என்ற எனது எதிர்பார்ப்பு பொய்த்தது. ஆங்கில வழிக் கல்வியின் இன்றியமையாமையைப் பலரும் வற்புறுத்தினர். உயர்கல்வி பெற ஆங்கில அறிவு தேவை, ஆங்கில அறிவு வேலை வாய்ப்பை நல்கும் என்பதே அவர்கள் முன் வைத்த முக்கிய காரணிகள்.

இன்று 50 வயதிற்கு மேற்பட்ட மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், அரசு உயர் அலுவலர், ஆசிரியர்கள் போன்ற அனைவரும் பொதுப் பள்ளிகளில் தமிழ்வழியிலேயே பள்ளிக் கல்வியை முடித்துப் பின்னர் ஆங்கில வழியில் உயர்கல்வி பெற்று சிறந்து விளங்குகின்றனர். பலரும் முதல் தலைமுறை மாணவர். அவர்களால் முடிந்தது இன்றைய தலைமுறையினருக்கு ஏன் இயலாது. பிரெஞ்ச், ஜெர்மன், ருசியன், ஜப்பானியம் போன்ற அயல்நாட்டு மொழிகளை 6, 8 மாதங்களில் வெற்றிகரமாகக் கற்பிக்கும்போது ஆங்கிலத்தை நமது பள்ளிகளில் 12 ஆண்டுகள் கற்பித்தும் அம்மொழியைக் கொண்டு அறிவு பெற இயலாதது ஏன் என்பது தீவிர ஆய்விற்குரியது. ஆங்கிலத்தைக் கையாள்வதில் திறன் வளர்க்க முற்படுதலே மாணவருக்குப் பயன் தரும். பயிற்று மொழியாக ஆங்கிலம் சுமைதான் உண்டாக்கும்.

புரியாத அயல் மொழியில் கற்கும்போது மனைமுறையைப் பின்பற்றும் அவசியம் ஏற்படும். பொருள் அறியாது கற்பது நிரந்தரமல்ல. தேர்வு முடிந்ததும் எல்லாம் மறந்துவிடும். இதனால்தான், மருத்துவம், பொறியியல் படிப்புகளில் முதலாமாண்டிலேயே பாதிக்கு மேற்பட்டவர் தோல்வியடைகின்றனர். புரிதலோடு கற்றல் தாய் மொழியில்தான் எளிமையாக நடக்கும். ஆங்கிலம் வேலை வாய்ப்பை உருவாக்கும் என்ற ஒரு வாதமும் மக்கள் மனதில் ஏற்றப்பட்டுள்ளது. நாகாலாந்தின் ஆட்சிமொழி, பயிற்று மொழி ஆங்கிலமே. நாகர்கள் அனைவரும் வேலை கிடைத்து நலமாக உள்ளனரா? ஆங்கிலவழியில் படித்துப் பொறியியல் பட்டம்பெற்ற இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை இல்லாதும் அல்லது குறைந்த ஊதியத்தில் பணியாற்றுவதும் ஏன்? பிற படித்த இளைஞர்கள் வேலை இல்லாது இருப்பவரது

எண்ணிக்கை 70 இலட்சம். உலக வங்கியின் கொள்கைகளைக் கடைப்பிடித்தன் விளைவு பணிகளின் அளவு குறைந்தது, அரசின் அவுட்சோர்சிங் நடைமுறையால் அரசுத் துறைகளில் பணிகள் மறைந்தன. தனியார்மையக் கொள்கை வேலை வாய்ப்புகளை உருவாக்காத இக்கொள்கையினின்றும் உலக வங்கியின் கோரப் பிடியினின்றும் விலகாது நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்க இயலாது என்பது நிதர்சனம். சமச்சீர் கல்விக் குழுவிற்காகப் பல நாடுகளின் பயிற்று மொழி நடைமுறைகளை வலையில் படிக்கும் பொழுது எந்த நாட்டிலும் ஒரு அந்நிய மொழி பயிற்று மொழியாக இல்லை என்பது காணப்பட்டது. ஒரு மொழி பேசும் நாடுகளில் பிரச்சனை இல்லை. பல மொழிகள் பேசும் நாடுகளில் வட்டார மொழியே பயிற்று மொழியாகும். மொழிவழி மாநிலமாக தமிழ்நாடு உருவானதால் தமிழகத்தின் ஆட்சிமொழியும் பயிற்று மொழியும் தமிழாகத் தான் இருக்க வேண்டுமென்பது உலக நாடுகள் தரும் செய்தி.

எல்லாத் துறைகளிலும் ஆய்வுகள் நடைபெற்றுப் புத்தறிவு நாளும் உண்டாக்கப்படுகின்றது. அவற்றை அறிந்திட ஆங்கில அறிவு தேவை என்று அறிஞர்கள் வாதிடுகின்றார்கள். இப்பிரச்சனையை எளிதாக ஜப்பானில் தீர்த்திருக்கின்றனர். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் சில துறைகளை ஒதுக்கி அத்துறைகளில் உலகத்தின் எந்த மூலையிலும் நடைபெறும் ஆய்வுகள், முடிவுகளை உடனுக்குடன் ஜப்பானிய மொழியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நர்சரி முதல் முனைவர் பட்டம் வரை ஜப்பானிய மொழியில் பெற இயலுவது சிறப்பு. நாமும் அம்முறையைக் கடைபிடித்து எட்டு திக்கும் சென்று அறிவைக் கொண்டு வர முடியும். அம்முயற்சியிலீடுபடுவது உடனடித் தேவை. உயர் கல்வியையும் தமிழில் வழங்க முடியும்.

நமது கல்வித் திட்டத்தில் மாணவருக்கு உரிய பங்கு கிடையாது. மாணவரில்லாது எக்கல்விக் கூடமும் இயங்காது. அவர்கள் நலனிற்காக கல்விக்கூடம் நடைபெறும் பொழுது அவர்கள் தேவைகளை, விருப்பங்களை, கருத்துகளைக் கூற வாய்ப்பளிக்க வேண்டும். பாடச்சுமைக் குறைப்புக்குழுக் கூட்டத்திற்கு வந்த 50–க்கு மேற்பட்ட கிராமப்புற மாணவர் எங்களுக்கு ஆங்கிலம் கற்பது கடினமாக இருக்கின்றது, அதை ஏன் எங்கள் மீது திணிக்க வேண்டும், ஆங்கிலத்தை விருப்பப் பாடமாக மட்டும் வையுங்கள் என்ற அவர்களது கோரிக்கை நியாயமானது என்றாலும் ஏற்கப்படவில்லை. ஆங்கிலவழிக் கல்வியிலும் பல மாணவர்கள் சிரமப்படுவார்கள். அதைக் கண்டு கொள்ளாமலிருப்பது குழந்தை உரிமை மீறலன்றோ!

சோழ நாகராஜன் தனது ஜுலை இதழ்க் கட்டுரையில் குறிப்பிட்டவண்ணம் சுதந்திர இந்தியாவில் (ஏன், அதற்கு முன்னரும் தான்) மத்திய, மாநில அரசுகள் அமைத்த எந்தக் கல்விக் குழுவும் ஆங்கிலவழிக் கல்வி சார்பாகப் பரிந்துரைக்கவில்லை. மாறாக அனைத்துக் குழுக்களும் தாய்மொழிவழிக் கல்வியையே வற்புறுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் குழந்தைகள் உரிமை சாசனமும் தாய்மொழியில் கற்பது குழந்தைகளின் உரிமை என்று கூறுகின்றது. எனவே, எந்த அடிப்படையில் தமிழக அரசு (அதாவது முதல்வர் ஜெயலலிதா) இம்முடிவை எடுத்தனர். இம்முடிவை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்பது பெரிய கேள்வி.

**இன்று 50 வயதிற்கு மேற்பட்ட மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், அரசு உயர் அலுவலர், ஆசிரியர்கள் போன்ற அனைவரும் பொதுப் பள்ளிகளில் தமிழ்வழியிலேயே பள்ளிக் கல்வியை முடித்துப் பின்னர் ஆங்கில வழியில் உயர்கல்வி பெற்று சிறந்து விளங்குகின்றனர்.**

ஒவ்வொரு பள்ளியிலும் 5 வகுப்புகளுக்கு இரண்டாசிரியர்கள் உள்ள நிலையில் கூடுதல் ஆங்கிலவழி வகுப்பிற்கு ஆசிரியர் எங்கே? ஆங்கில வழிக் கற்பிப்போர் ஆங்கிலக் கலை சொற்களை போதிய அளவு அறிந்திருக்க மாட்டார்கள். இது கற்றலை மனன முறைக்கு மாற்றவே உதவும். மேலும் ஒரே வகுப்பில் இருவழிக் கல்வி பெறுவோர் இருக்கும் பொழுது மாணவரிடம் வர்க்க பேதம் உருவாகும். எனவே கல்வியியல், உளவியல், சமூகயியல் கோட்பாடுகள் அனைத்திற்கும் முரண்பட்டது தமிழக அரசின் முடிவு. ஜனநாயக நெறிப்படி இதனைத் திரும்பப்பெற்று தமிழ்வழிக் கல்வியை எல்லாப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

உயர்கல்வியிலும் தமிழ்வழிக் கல்வி சிறப்புற நடைபெற தக்க நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட வேண்டும். ஆங்கிலம் நன்முறையில் கற்றிட கற்பித்தல் முறைகளில் சீரிய மாற்றங்கள் கொண்டு வரவேண்டும். தொடக்கப் பள்ளிகளில் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்பதை உறுதி செய்தல் வேண்டும். இவ்வழி கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற கவிஞரின் வாக்கை மெய்ப்பிக்க வேண்டும்.

# ஆங்கிலவழியில் அரசநடை

– ச. தமிழ்ச்செல்வன்

நாம் வாழும் இந்த அறிவியல் தொழில்நுட்ப உலகத்தில் உலகளாவிய தொடர்புகளுக்கும் தகவல் பரிமாற்றத்துக்கும் ஆங்கிலமொழியறிவு தேவை. தபாலாபீஸ் பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்தை தார்பூசி அழித்ததுபோல ஆங்கிலத்தை அழிப்பது சாத்தியமல்ல. அது இன்று நம் வேலையல்ல. அவசியமுமல்ல. ஆங்கில மொழியறிவு இன்று ஓர் அடிப்படைத் தேவை. அதற்காக பயிற்றுமொழியாக ஆங்கிலம் வேண்டும் என்று கூறுவது தொலைநோக்கில்லாத குருட்டுத்தனமான கண்ணோட்டமாகும்.

முந்தைய திமுக அரசும் சரி, இன்றைய அதிமுக அரசும் சரி, தமிழ்தான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. அரசின் சமீபத்திய அறிவிப்புகளுக்காக கண்டன அறிக்கை விடும் கலைஞர் தன் ஆட்சியின்போது சமச்சீர் கல்வி கொண்டுவர எத்தனை தடை போட்டார் என்பதும், சமச்சீர் கல்விக்காகப் போராடிய மாணவர்கள் மீது தடியடி நடத்தினார் என்பதும் அப்போதே சமச்சீர் கல்வி தமிழில்தான் என்று உத்தரவிட தயாராக இல்லை என்பதும் நாம் அறிந்ததே.

ஒவ்வொரு மனிதனின் சிந்தனையும் படைப்பாற்றல் திறனும் புத்தாக்கத் திறனும் தாய் மொழிவழிக் கல்வியால் மட்டுமே மேம்பாடடையும் என்பது சமீபத்திய 21ஆம் நூற்றாண்டுக்கான யுனெஸ்கோவின் கல்வி ஆவணம் (21) உள்ளிட்டு அனைத்து உலகக் கல்வியாளர்களின் அழுத்தமான கருத்தாகும். ஆனால் தாய் மொழியில் அனைத்து அறிவுச்சேகரமும் கொணர்ந்திங்கு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இதற்கு முன்நிபந்தனையாக நாணயத்தின் மறுபக்கம் போல சொல்லியாக வேண்டும். இந்தத் திசையில் தமிழக ஆட்சியாளர்கள் கடந்த 50 ஆண்டுகளாக எந்தத் துரும்பையும் கிள்ளிப்போடவில்லை.

உலகின் எல்லா நாடுகளிலும் அவரவர் தாய்மொழியில்தான் அத்தனை அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சமூகப் பாடங்களும் நடத்தப்படுகின்றன. ஆங்கிலம் தாய்மொழியாக இருக்கும் நாடுகளில் மட்டும்தான் ஆங்கிலவழியில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. நீண்ட காலமாக நிலவும் மத்திய மாநில அரசுகளின் மொழிக்கொள்கை, கல்விக்கொள்கை இவற்றின் காரணமாக உருவாக்கப்பட்டுள்ள புறச்சூழல் பெற்றோரை ஆங்கிலவழியில் பிள்ளைகளைத் தள்ளுவதே நல்லது என நினைக்க வைத்துள்ளது. அந்த மனநிலையில் குளிர்காய நினைக்கும் தமிழக அரசை வன்மையாக நாம் கண்டனம் செய்ய வேண்டும். அய்யன் திருவள்ளுவனுக்குச் சிலை வைப்பதும் அனைத்து உள்ளாட்சி மன்ற அலுவலகங்களின் உச்சியிலும் ‘தமிழ் வாழ்க’ என்று பல்புகள் எரியவிடுவதும் தமிழ் வளர்த்த மதுரையிலே எனது அரசு தமிழன்னைக்கு 100 கோடியில் சிலை வைக்கும் என்று அறிவிப்பதும் செம்மொழிக்காகக் கோவையில் 400 கோடி ரூபாய்க்கு வாணவேடிக்கை நடத்தியதும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஒரு சிறு உரோம அளவுக்குக் கூட உதவாது. உதவவில்லை.

இந்தக் கொள்ளை போதாதென்று இன்று உலகமயப் பொருளாதாரத்தின் மூன்றாம் பத்தாண்டை நோக்கித் தமிழகம் செல்லும் சூழலில் தம் ஏகாதிபத்திய எஜமானர்களின் தேவைக்கேற்பத் தன் நாட்டு மக்களின் கால்களைத் தறித்துச் சிறிதாக்கும் முயற்சியில் நம்நாட்டு அரசாங்கங்கள் கல்விக்கொள்கையையும் மொழிக்கொள்கையையும் கூட அதற்கேற்ப மாற்றியமைக்கின்றன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். கல்வி தரும் கடமையிலிருந்து முற்றிலுமாக வெளியேறத் துடிக்கும் அரசின் மனநிலையை இந்தப் பின்னணியில் வைத்து நாம் பார்க்க வேண்டும்.

இன்று ஆங்கில வழிக்கல்வி என்று சாயும் அதிமுக அரசின் முடிவை ஒட்டுமொத்தக் கல்வி அரசியலின் பின்னணியில் வைத்தே நாம் பார்க்க வேண்டும். அரசுப்பள்ளிகளில் ஆங்கில வழி என்கிற இந்த முடிவை மட்டும் கைவிடுங்கள் என்று கோரிக்கை வைப்பதால் பெரிய பயன் ஏதும் விளையாது. ஒட்டுமொத்தக் கல்விமுறையே பொதுப்பள்ளிக் கல்விக்கும் உண்மையான சமச்சீர் தமிழ் வழிக்கல்விக்கும் ஆதரவாக மாற்றப்பட வேண்டும்.

உலகத்து அறிவையெல்லாம் தமிழில் கொண்டுவரத் தவறிவிட்ட நமது கல்வி முறை – அறிவியல் கலைச்சொற்கள் உருவாக்கத்தில் நொடிதோறும் தீவிரமாக இயங்கத் தவறிவிட்ட நம் கடந்தகாலம் – இவற்றையெல்லாம் பற்றித் துளியும் கவலை கொள்ளாத உணர்வற்ற தமிழக ஆட்சியாளர்கள் – எல்லாமாகச் சேர்ந்து நம் பெற்றோர்களின் மூளையை ஆங்கிலவழிக் கல்வியை விட்டால் கதியில்லை என்று நம்பும்படியாகத் தகவமைத்துவிட்டன. அது மட்டுமன்றி எந்த அடிப்படைக் கட்டுமான வசதிகளுமில்லாத பஸ்



Source: http://www.thehindu.com

கூறுவதைக்கேட்டு மனசில் ரத்தம் கசிகிறது. பல்வேறு அதிகாரப்பூர்வ ஆய்வுகளே கூறுவதைப்போல தமிழ் நாட்டில் அரசுப்பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு முடித்துள்ள 60 சதவீதம் மாணவ மாணவிகளுக்கு எழுத்துக் கூட்டிக்கூடத் தமிழை வாசிக்கவோ ரெண்டு வரி தமிழில் சொந்தமாக எழுதவோ திறன் இல்லை. அதிர்ச்சியூட்டும் இந்த ஆய்வு முடிவுகளின் பின்னணியில் தமிழையே ஒழுங்காகச் சொல்லித்தரத் துப்பில்லை. இதிலே ஆங்கில வழி என்பது ஸ்டாண்ட் கழிப்பறைகளைப்போல அரசால் ஆக்கப்பட்டுவிட்ட அரசுப்பள்ளிகள் – அவற்றில் பணிபுரியும் பெருவாரியான பணிப்பண்பாடே இல்லாத ஆசிரியப் பெருந்தகைகள் – இவற்றால் மதிப்பிழந்து நிற்கும் அரசுப்பள்ளிகள். கல்விக்கும் பகுத்தறிவுக்கும் சம்பந்தமில்லாத அராஜகமான கல்வி அதிகாரிகள்...

ஆகவே ஆண்டுக்கு ஒரு லட்சம் முதல் மூன்று லட்சம் வரை பீஸ் வாங்கி ஆங்கில வழிக்கல்விமுறையால் கொடிபறக்க வாழ்ந்து கொண்டிருக்கும் ஆங்கிலவழித் தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் வாசலில் நம் பெற்றோர்கள் பிச்சைக்காரர்களைப் போலக் கையேந்தி நிற்கிறார்கள். பெற்றோர்கள் ஒருபோதும் குற்றவாளிகள் அல்லர். காற்றடிக்கும்போது முடிந்தவரை தூற்றிக்கொள்ளும் தனியார் பள்ளிகளும் கூட முதல் குற்றவாளிகள் அல்லர்.

இதைப்பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாத தமிழக அரசு ஆங்கிலவழிக் கல்விமுறையை கொண்டு வந்தால் தனியார் பள்ளிகளில் சேரும் போக்கைத் தடுத்து விடலாம் என்று கூறுவது கைத்த நகைச்சுவையாகும். கிராமப்புறக் குழந்தைகளுக்கும் ஆங்கிலவழிக் கல்வி கிடைப்பதை இந்த அரசு உத்தரவாதம் செய்யும் என்று அரசுப்பள்ளிகள் மீதான மயிரிழை நம்பிக்கையையும் பெற்றோர் மனசிலிருந்து துடைத்து அவ்வளவு பேருமே தனியார் பள்ளிக்கு ஓட வேண்டிய நிலையையே உருவாக்கும். அதுதான் இந்த அரசாணையின் நோக்கம் போலும்.

உதட்டில் தமிழும் உள்ளத்தில் ஆங்கிலமுமாக தன் வாழ்நாள் முழுதும் தமிழ்ப்பணியாற்றிய தமிழினத் தலைவரையும் உடம்பே ஆங்கிலமாகி நிற்கும் அம்மாவையும் நம்பி எந்தப் பயனும் இல்லை. 50 ஆண்டுகால வரலாற்றில் உருவான ஆங்கில மோகத்தை மாற்றும் பெரிய போராட்டத்தை நாம் எல்லோரும் சேர்ந்து துவக்கியாக வேண்டும். இந்துத்வா சக்திகளுக்கு எப்படி மதம் ஒரு அணிதிரட்டும் கருவியாக உதவுகிறதோ அதுபோல தமிழ் என்பது இவர்களுக்கு ஓர் அரசியல் அணிதிரட்டலுக்கான கருவி என்பதற்குமேல் இவர்களுக்கும் தமிழுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மொழியைப் படைத்த மக்களே தம் மொழியைக் காக்கும் போரை நடத்தியாக வேண்டும்.

அது ஒன்றும் எளிதான காரியமல்ல.

**ஆதாரம்: காலச்சுவடு, ஜூலை 2013**

# தேவைப்படுவது மரியாதை, வெறும் சோறு அல்ல

*அடித்தட்டு மக்களுக்கு மனித மரியாதை மறுக்கப்படுவதன் பிரதிபலிப்புதான் மதிய உணவு சோகம்*

என்ன ஒரு பயங்கரமான சோகம்! அந்தக் குழந்தைகளின் பெற்றோர் அவர்களை கல்வி பயில்வதற்காக பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருந்தனர். ஆனால், அவர்களோ அங்கே மதிய உணவு சாப்பிட்ட பிறகு மரணத்தைத் தழுவிவிட்டனர். பீகார் மாநிலத்தின் சரன் மாவட்டத்தில் சாப்ரா நகரத்திற்கு அருகில் உள்ள கந்தாமான் கிராமத்தில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த 23 குழந்தைகள் ஜுலை 16 அன்று மதிய உணவாக சோறு, சோயாபீன்ஸ் சாப்பிட்ட பிறகு மரணமடைந்தது மிகப் பரவலாக வேதனையையும் அதிர்ச்சியையும் கோவத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மதிய உணவுத் திட்டம் என்று பொதுவாக அறியப்படுகிற "தேசிய தொடக்கக் கல்வி ஆதரவு ஊட்டச்சத்துத் திட்டம்" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக வழங்கப்பட்ட உணவில் மோனாக்ரோட்டோபாஸ் என்ற உயிர்க்கொல்லி பூச்சி மருந்து கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படியொரு துயரம் நிகழ்வதற்காகக் காத்திருந்ததோ ?

**குழந்தைகள் ஆரம்ப சுகாதார மையத்திற்கு விரைவாக கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், அங்கே மருத்துவர்கள் யாரும் இல்லை. சொல்லப் போனால் தண்ணீர் கூட வைக்கப்பட்டிருக்கவில்லை**

திட்டக்குழுவின் "சமைக்கப்பட்ட மதிய உணவு செயல்பாட்டு மதிப்பீடு" என்ற, 2010ம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட திட்ட மதிப்பீட்டு அறிக்கை எண் – 202, பீகாரில் (ஆய்வுக்கான மாதிரிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில்) பெரும்பாலான குழந்தைகள் தங்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மோசமாக இருந்தது என்று கூறியதாக தெரிவிக்கிறது. "சமையல் கூடங்களும், பொருள்களை வைத்திருப்பதற்கான அறைகளும் இல்லை அல்லது மோசமான நிலைமையில் இருக்கின்றன" என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது. பொதுவாக மதிய உணவுத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமென்றால் அதற்கு முக்கியத் தேவையான "அடிப்படை உள்கட்டுமான வசதிகள் பற்றாக்குறையாக இருப்பது" கண்கூடாகத் தெரிகிறது, ஆட்கள் பற்றாக்குறையும் இருக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது. மேலும், இந்தத் திட்டங்களை கண்காணிப்பதில் சுகாதாரத்துறை அமைச்சகம் எவ்வகையிலும் சம்பந்தப்படவில்லை. இதற்காக அமைக்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் வட்டார / கிராம மட்டத்தில் இத்திட்டத்தை கண்காணிக்க தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தியதில்லை. இருந்த போதிலும், "மாதிரிப் பள்ளிகளில் வகுப்பறைப் பசியைத் தீர்ப்பதில்" இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது; "நாடு முழுவதும் பள்ளிகளில் மாணவர் வருகை அதிகரிப்பதில் இத்திட்டம் பங்களித்துள்ளது" என்று அந்த அறிக்கை கூறுகிறது (இந்த ஆய்வு 17 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டது).

ஆனால் இங்கே, நேர்மையாகச் சொல்வதென்றால், குழந்தைகளின் பட்டினிப் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் செயல்படுவது போல தெரிந்தாலும், அது எளிய மக்களின் மரியாதையைத் தகர்க்கும் வகையிலேயே செயல்படுத்தப்படுகிறது. மதிய உணவுத் திட்டம், அனைவருக்கும் கல்வி திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள், பொது விநியோக முறை, ஆரம்ப சுகாதார மையங்களின் மருத்துவ கவனிப்பு, மாவட்ட மருத்துவமனைகள், ஏன் – மாநில தலைநகரங்களில் உள்ள அரசுப் பொது மருத்துவமனைகளிலும் கூட எளிய மக்களுக்கான சமூக சேவைகள் மிக மோசமான தரத்தில் வழங்கப்படுவதில் வர்க்கப் பாகுபாடு இருப்பதை இங்கு நாம் குறிப்பிடுகிறோம்.

உதாரணமாக கந்தாமான் கிராமத்து தொடக்கப்பள்ளிக் குழந்தைகளின் அவல நிலையை எடுத்துக்கொள்வோம். அந்தக் குழந்தைகள் ஆரம்ப சுகாதார மையத்திற்கு விரைவாக கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், அங்கே மருத்துவர்கள் யாரும் இல்லை. சொல்லப் போனால் தண்ணீர் கூட வைக்கப்பட்டிருக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஆகவே, அந்தக் குழந்தைகளின் பெற்றோர் ஒரு தனியார்

மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அங்கிருந்த மருத்துவர், குழந்தைகளின் நிலைமை தனது சாத்திய எல்லைக்கு அப்பால் போய்விட்டது என்று கூறிவிட்டார். அங்கிருந்த ஒரே ஒரு ஆம்புலன்ஸ் வண்டியில், அதன் கொள்திறனுக்கு மேல் குழந்தைகளும் மற்றவர்களும் ஏற்றிக்கொள்ளப்பட்டு, சாப்ரா நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களை கவனிப்பதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தேவையான சிகிச்சையை மருத்துவமனையால் வழங்க முடியாமலும் போனது. தொடர்ந்து அந்தக் குழந்தைகள் 65 கி.மீ. தொலைவில் உள்ள பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கே மருத்துவர்கள் இருந்தார்கள் என்றாலும், போதிய மருத்துவக் கருவிகள் இல்லை என்று இன்னொரு செய்தி தெரிவிக்கிறது. குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில், 6 படுக்கைகளுடன் இணைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் கருவிகளில் ஒன்று கூட செயல்படவில்லை. நரம்பு வழியாக செலுத்தியாக வேண்டிய திரவங்களும் இருப்பில் இல்லை.

இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் எதுவும் இல்லையா? விரிவான தேர்தல் முறை, வாக்குகளுக்காக கட்சிகளுக்கிடையே போட்டி நாடாளுமன்ற வாதம் என எல்லாம் இருந்த போதிலும் குடிமக்கள் அனைவருக்கும் வர்க்க வேறுபாடோ அந்தஸ்து வேறுபாடோ இல்லாமல், மதிய உணவு, கல்வி, பொது விநியோகம் போன்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சமூக சேவைகள் தரமான முறையில் கிடைப்பதை உறுதிப்படுத்துகிற ஏற்பாடு எதுவும் இல்லாமல் போனது ஏன்?

**“சமையல் கூடங்களும், பொருள்களை வைத்திருப்பதற்கான அறைகளும் “இல்லை அல்லது மோசமான நிலைமையில் இருக்கின்றன” என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.**

கியூபா நாட்டின் புரட்சிகரக் கவிஞர் ஜோஸ் மார்ட்டி, “மற்றொரு மனிதரின் முகத்தில் அறை விழுகிறது என்றால், அனைத்து மனிதர்களும் வலியை உணர வேண்டும்,” என்று கூறியது நினைவுக்கு வருகிறது. அத்தகைய ஒரு மரியாதையான நிலை நமது நாட்டில் வரவேண்டுமென்றால் இங்கேயும் ஒரு புரட்சி தேவைப்படுகிறது என்பதே உண்மை. “பாட்டாளி வர்க்கத்திற்கு உணவைவிட அதிகமாக மரியாதைத் தேவைப்படுகிறது,” என்றார் கார்ல் மார்க்ஸ். ஆனால், பணத்தை வழிபடுகிற இன்றைய நவீன தாராளமய யுகத்தில் இதையெல்லாம் காது கொடுத்துக் கேட்பது யார்? மதிய உணவுத் திட்டங்களில் பணியாற்றும் சமையலர்களானாலும் சரி, அவர்களது உதவியாளர்களானாலும் சரி, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் ஒப்பந்த ஆசிரியர்களானாலும் சரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அங்கன்வாடி பணியாளர்களானாலும் சரி, அவர்களது உதவியாளர்களானாலும் சரி, தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின் “அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார பணியாளர்கள்” என்றாலும் சரி – இந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நிரந்தர அரசு ஊழியர்கள் என்ற அந்தஸ்து கூட வழங்கப்படவில்லை. சொல்லப் போனால், அவர்களில் பெரும்பாலானோருக்கு குறைந்தபட்சக் கூலி கூட வழங்கப்படுவதில்லை.

நவீன தாராளவாத காலகட்டத்தில் ஒரு புதிய நிதி சர்வாதிகாரம் உருவாகியுள்ளது. ஃபோர்ப் நிறுவனம் அறிவித்த இந்தியாவின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் பட்டியலின் உயர்மட்டத்தில் இருக்கிற ஒரு சிலர் “இழக்க வைப்பதன் மூலம் குவிப்பது” என்ற நடைமுறையின் மூலம் அந்த சர்வாதிகாரத்தை பெருமளவுக்கு வளப்படுத்தியுள்ளனர். அதே நேரத்தில், நவீன தாராளவாதமானது இழந்தவர்களிடையேயும் சுரண்டப்படுபவர்களிடையேயும் நிலவி வந்த ஒருமைப்பாட்டு உறவுகளை பலவீனப்படுத்தியுள்ளது. நவீன தாராளவாதம் தனது சட்டப்பூர்வ ஆளுமையை பாதுகாத்துக் கொள்வதற்காக கொண்டு வந்த புதிய மக்கள் நல ஏற்பாடுகள், ஆழமான வர்க்க, சாதிய, பாலின பாகுபாடுகளால் பிடிக்கப்பட்டுள்ளன.

கந்தாமான் கிராமத்து தொடக்கப் பள்ளியிலும், பின்னர் அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அதன்பின் சாப்ரா நகரத்தின் மாவட்ட மருத்துவமனையிலும், இறுதியில் பாட்னா மருத்துவமனையிலும் அந்தக் குழந்தைகளுக்கு ஏற்பட்ட நிலைமையில் நவீன தாராளவத அமைப்பின் வர்க்கப் பாகுபாடு அப்பட்டமாக வெளிப்படுகிறது. உண்மையிலேயே, ஜோஸ்மார்ட்டி கூறியது போன்ற அந்த மனித மானுட மரியாதையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தில் இந்திய மன்னின் பாவப்பட்ட மக்களோடு தங்களை இணைத்துக்கொள்கிற போராளிகள் இந்த நாட்டிற்கு நிறையப் பேர் தேவைப்படுகிறார்கள்.

**August 10, 2013 VOL XLVIII No.32, Economic & Political Weekly**

# பள்ளி செல்லா குழந்தைகள் எண்ணிக்கை 47,376 பேர்: கணக்கெடுப்பில் கண்டுபிடிப்பு

நாமக்கல்: மாநிலம் முழுவதும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில், பள்ளி செல்லா குழந்தைகள், 47,376 பேர் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு, சிறப்பு மையங்களிலும், வயதுக்கேற்ற பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டு, கல்வி அளிக்கப்படுகிறது.

அனைவருக்கும் கல்வி இயக்க, மாநில இயக்குனரக உத்தரவை அடுத்து, மாநிலம் முழுவதும் ஆண்டு தோறும், 6 – 14 வயது வரை உள்ள, பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுக்கும் பணி நடத்தப்படுகிறது. அந்தந்த யூனியன் பகுதியில் உள்ள, வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், தலைமையாசிரியர்கள், தன்னார்வலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவர். நடப்பு ஆண்டுக்கான கணக்கெடுப்பு, கடந்த ஏப்., 10ம் தேதி, மாநிலம் முழுவதும் துவங்கியது.

கணக்கெடுப்பு பணியின் போது சேகரித்த விவரங்கள், அனைவருக்கும் கல்வி இயக்க மாநில இயக்குனரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அதன்படி, மாநிலம் முழுவதும், 6 – 10 வயது வரை, 18,216 பேரும், 11 – 14 வரை, 29,160 பேரும் பள்ளி செல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அதிகபட்சமாக, விழுப்புரம் மாவட்டத்தில், 4,587 பேரும், குறைந்த பட்சமாக, நீலகிரி மாவட்டத்தில், 462 பேரும் பள்ளி செல்லாமல் உள்ளனர். மேலும், தேனி மாவட்டம், 545 பேர், கன்னியாகுமரி, 551 பேர், புதுக்கோட்டை மாவட்டம், 572 பேர் என, குறைந்த அளவில் பள்ளி செல்லா குழந்தைகள் உள்ளது, கணக்கெடுப்பில் தெரியவந்து உள்ளது. கண்டு பிடிக்கப்பட்ட பள்ளி செல்லா குழந்தைகளுக்கு, சிறப்பு மையங்களிலும், வயதுக்கேற்ற பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டு, கல்வி கற்பிக்கப்படுகிறது.

**பள்ளி குறித்து கணக்கெடுப்பு:**

தமிழகம் முழுவதும், ஐந்து மாணவர்களுக்கும் குறைவாக உள்ள அரசு தொடக்கப் பள்ளி குறித்து கணக்கெடுப்பு நடத்த, மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு, பள்ளி கல்வித் துறை உத்தரவிட்டு உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, 836 அரசு தொடக்கப் பள்ளிகளில் நடந்த கணக்கெடுப்பில், பாலக்கோட்டை அடுத்த, அய்தாண்டஹள்ளி அரசு தொடக்கப் பள்ளியில், 3 மாணவர் மட்டும் படிப்பது தெரியவந்துள்ளது. இங்கு, 3ம் வகுப்பு, 4ம் வகுப்பு, 5ம் வகுப்பில் தலா, 1 மாணவர் என, மொத்தம், 3 மாணவர்களே படித்து வருகின்றனர். இப்பள்ளி குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களுக்கு தகவல் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக, கல்வித் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து, கல்வித் துறை அலுவலர் ஒருவர் கூறியது: பெற்றோர், தங்களது குழந்தைகளை தனியார் பள்ளிகளில் சேர்ப்பதைப் பெருமையாகக் கருதுகின்றனர். இந்த கல்வியாண்டில் பெரும்பாலான அரசு பள்ளிகளிலும், ஆங்கில வழிக் கல்வி துவங்கப்பட்டாலும், பெரும்பாலானோர் தங்களது குழந்தைகளை, தனியார் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளில் சேர்ப்பதைப் பெருமையாகக் கருதுகின்றனர். அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் கூட, தங்களது குழந்தைகளை, தனியார் பள்ளிகளில் சேர்ப்பதன் விளைவாக இது போன்ற நிகழ்வு நடப்பதற்குக் காரணமாக உள்ளது. இதனால், அரசு பள்ளிகளில், 5க்கும் குறைவாக உள்ள படிக்கும் மாணவர்களால் அரசுக்குச் செலவு ஏற்படுவதை விட, அங்கு பணியாற்றும் ஆசிரியர், மாணவர்களுக்கு முழு ஈடுபாடு உடன் கல்வி கற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

**ஆதாரம்: தினமலர், 28.7.2013**

# மதிய உணவு திட்டங்கள்: ஒரு முன்னோக்கிய பார்வை

– ரீத்திகா கேரா

*மதிய உணவுத் திட்டங்களின் மூலம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நாள்தோறும் 10 கோடி குழந்தைகளுக்கு மேல் உணவு வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஒரு கெடு வாய்ப்பாக, சில மோசமான நிகழ்வுகளின்போது மட்டுமே இந்த பிரபலமான, ஒப்பிட்டளவில் வெற்றிகரமான இந்தத் திட்டம் பற்றிய செய்திகள் வெளி வருகின்றன. இந்த முறை, பீகாரில் 23 குழந்தைகள் தங்களது பள்ளியில் மதிய உணவு உட்கொண்ட பிறகு மரணமடைந்த சோகத்தைத் தொடர்ந்து அது செய்தியாகியிருக்கிறது. சமீபத்திய பொருளாதார ஆய்வுகளில், பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கை, அவர்களது வருகை, தொடர்ச்சி, ஊட்டச்சத்து ஆகியவற்றில் இத்திட்டங்களின் ஆக்கப்பூர்வமான தாக்கம் குறித்த விவரங்கள் பதிவாகியுள்ளன. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிடமிருந்து கற்றுக்கொள்வதன் மூலம் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், (உணவின் தரம், கடமைப் பொறுப்பு) உள்ள சில நீண்டகால பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான ஒரு வாய்ப்பு இந்த பீகார் துயரத்தால் கிடைத்திருக்கிறது.*

**பீகார் துயரம்:**

2013 ஜுலை 16 அன்று கந்தாமான் (சரண் மாவட்டம், பீகார்) கிராமத்துப் பள்ளியில் வழக்கத்தைவிட அதிகமான மாணவர்கள் வந்திருந்தார்கள். ஏனென்றால், அன்றைக்கு பாடப் புத்தகங்கள் வழங்கப்பட இருந்ததாக பெற்றோர்களுக்கு தெரியவந்திருந்தது.[1] அந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்று சொந்தமாக கட்டிடம் கிடையாது. கல்வி உரிமைச் சட்டத்தின் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட்டாக வேண்டும் என்பதால் ஒரு சமூக நலக்கூடத்திற்கு வெளியே அந்தப் பள்ளி இயங்கி வருகிறது. உணவைத் தயாரிப்பதற்கான சமையல் கூடம் எதுவும் அந்தப் பள்ளிக்கு இல்லை. கட்டிடத்தின் தாழ்வாரத்தில் வைத்துதான் உணவு சமைக்கப்பட்டது. உணவுப் பொருள்களை பாதுகாத்து வைப்பதற்கான முறையான வசதியும் இல்லை.

உணவுப் பொருள்கள் ஆசிரியரின் வீட்டில்தான் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து தினமும் தேவையான அளவிற்கு சமையலர் கொண்டு வருவார். சட்டியில் எண்ணெயை ஊற்றிய சமையலர், கருப்புப் புகை எழுந்ததைப் பார்த்ததோடு, ஒரு கெட்ட வாடை அடிப்பதாகவும் ஆசிரியர்களிடம் தெரிவித்தார். ஆனால், ஆசிரியர் அதை கவனத்தில் கொள்ளவில்லை. சமைக்கப்பட்ட உணவின் நிறம் மாறியிருந்தது. அதுகுறித்தும் சமையலர், மாணவர்கள் புகார் செய்தனர். அப்போதும் ஆசிரியர் அசைந்து கொடுக்கவில்லை, கையில் பிரம்பை வைத்துக்கொண்டு மாணவர்களை அவர் சத்தம் போடாமல் இருக்கச் சொன்னதாகக் கூறப்படுகிறது.

குழந்தைகள் உணவைச் சாப்பிட்ட உடனேயே அவர்களுக்கு தலைச் சுற்றல் ஏற்பட்டது. பல குழந்தைகள் மயங்கி விழுந்தனர். தொடக்கத்தில் தலைமை ஆசிரியையின் கணவர் அந்தக் குழந்தைகளின் மருத்துவச் செலவுகளை தானே ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். ஆனால், முதல் குழந்தை இறந்த உடனேயே அந்தக் குடும்பம் ஊரைவிட்டே வெளியேறிவிட்டது. இதனிடையே பெற்றோர்கள் அருகில் உள்ள மஷ்ராக் வட்டத்தின் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குழந்தைகளைக் கொண்டுசென்றனர். அங்கிருந்த ஒரே மருத்துவர் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கத் தயங்கினார். பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி, அந்த சுகாதார நிலையத்தின் ஆம்புலன்ஸ் வண்டியில் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வைத்தனர். குழந்தைகளுக்கு முறையான சிகிச்சை கிடைப்பதற்கு முன் 3, 4 மணி நேரம் கடந்துவிட்டது. இறுதியாக அந்தக் குழந்தைகள் பாட்னா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மொத்தத்தில் 23 குழந்தைகள் பலியானார்கள். பிகார் மாநிலத்தில் நடந்துள்ள இந்தத் துயரமான சம்பவம், பொதுவாக மக்களிடையே

வரவேற்கப்படுகிற வெற்றிகரமான இந்த மதிய உணவு திட்டம் குறித்த பல கேள்விகளை எழுப்பியுள்ளது.


Source: http://www.washingtonpost.com

இந்தத் திட்டம் குறித்து தெரியாதவர்களுக்காக சில விவரங்கள்: இந்தியாவின் மதிய உணவுத் திட்டம் ஒரு மிகப் பெரிய செயல்திட்டமாகும். நாடு முழுவதும் நாள்தோறும் சுமார் 12 கோடி குழந்தைகளுக்கு சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. இந்திய அரசால் தொடங்கப்பட்ட (தொடர்ச்சியான செயல்பாட்டிலும், அளவிலும்) மிக ''வெற்றிகரமான'' உணவுப் பாதுகாப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்று.[2]

கல்வியிலும் ஊட்டச்சத்திலும் இந்தத் திட்டத்தின் தாக்கம் குறித்து விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கப்படுவதில் குறிப்பாக நலிவுற்றப் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள் சேர்க்கப்படுவதில் இத்திட்டம் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தியுள்ளது என்று அந்த ஆய்வுகள் காட்டுகின்றன. முதல் வகுப்பில் சேர்க்கப்படும் குழந்தைகள் 12 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வாளர் அஃப்ரீடி (2011) தெரிவிக்கிறார். அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் முதல் வகுப்பில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையில் மிகப் பெரிய தாக்கத்தை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளதாக (21 சதவீதம் அதிகரிப்பு) ஆய்வாளர்கள் ஜெயராமன், சிம்ரோத் (2011) கூறியுள்ளனர். (பள்ளிகளிலிருந்து இடைநிற்றல் என்பது தள்ளிப்போடப்பட்டு) குழந்தைகளின் தொடர்ச்சிக்கு இது உதவுகிறது. தொடர்ச்சியான வருகைக்கும் உதவுகிறது.

மத்திய பிரதேசத்தில் பள்ளி இல்லாத நாளிலும் ஊட்டச்சத்து அளவை ஒப்பிட்டு ஆய்வு செய்த அஃப்ரீடி (2010), ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்பட்டிருப்பதாக கண்டறிந்துள்ளார். ''இத்திட்டத்தில் பங்கேற்ற குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவு என்பது கனிசமாக 49 சதவீதம் அதிகரித்து 100 சதவீதத்தை எட்டியுள்ளது,'' என்று கூறுகிறார் அவர். புரதச்சத்து எடுத்துக்கொள்ளப்படுவதில் இருந்த பற்றாக்குறை என்பது 100 சதவீதம் குறைந்துள்ளது. இரும்புச் சத்துப் பற்றாக்குறை 10 சதவீதம் குறைந்துள்ளது. ''ஒரு குழந்தைக்கு ஒரு நாளில் 3 செண்ட் (சுமார் ரூ. 6.75) செலவில்'' இது நிகழ்ந்துள்ளது. ஆந்திர மாநிலத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையில் இதனால் ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்று (வெளிவர இருக்கும்) சிங், பார்க், டெர்கான் ஆகியோரது ஆய்வறிக்கை கூறுகிறது. வறட்சி நிலைமைகளை எதிர்கொள்ள நேர்ந்து, இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த குழந்தைகளின் நிலை, வறட்சியை சந்திக்காத குழந்தைகளின் நிலையைவிட மோசமாக இல்லை. இறுதியாக, குழந்தைகளின் வயிறு நிரம்பியிருக்கிறபோது அவர்கள் பள்ளிகளில் கூடுதலாகக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. தில்லியில் குழந்தைகளின் கற்றல் திறனில் மதிய உணவுத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள தாக்கத்திற்கு அஃப்ரீடி, பரூவா (வெளிவர இருக்கும்) சோமநாதா ஆகியோரது அறிக்கைகள் சில ஆதாரங்களை முன் வைக்கின்றன.

குழந்தையின் கண்ணோட்டத்தில், சூடான உணவால் ஏற்படுகிற ஈர்ப்பு பள்ளிச் சூழலை குழந்தைக்கு இணக்கமானதாக மாற்றுகிறது. அங்கன்வாடி அமைப்புகள் தொடர்ச்சியாக செயல்படாத இடங்களில், பள்ளிகளில் பதிவு செய்யப்படாத குழந்தைகளும் உணவு நேரத்தில் பள்ளிக்கு வருவதை காண்பது ஒன்றும் அறிதானதல்ல. பெற்றோர்களிடையேயும் மதிய உணவுத் திட்டம் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஏழைகளாக உள்ள உழைக்கும் பெண்களுக்கு அவர்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை இத்திட்டம் இலகுவானதாக்குகிறது. மேலும், ஊட்டச்சத்து கல்வியைப் புகட்டுவதற்கான (இதுவரை பயன்படுத்தப்படாத) வாய்ப்பையும், (சாப்பிடுவதற்கு முன் கைகளைக் கழுவுவது உள்ளிட்ட) சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கற்பிப்பதற்கான சூழலையும் இத்திட்டம் சிறப்பான முறையில் ஏற்படுத்துகிறது. வறிய நிலையில் உள்ள பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு இத்திட்டம் வேலை வாய்ப்பளிக்கிறது.

சாதி வேறுபாடுகளின் கறாரான பிடியை உடைப்பதற்கான ஒரு வாய்ப்பையும் இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள், அநேகமாக அவர்களது சாதியைச் சேர்ந்தவரால் சமைக்கப்படாத உணவை, பகிர்ந்துகொள்ள முடிகிறது. ''மேல்சாதிகள்'' என்று கூறப்படும் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள், பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தில் உணவு உட்கொள்வதை நானே பார்த்திருக்கிறேன். அவர்களது பெற்றோர் மதிய உணவுத் திட்டத்திற்குப் போக வேண்டாம் என்று சொல்வதையும் மீறி இக்குழந்தைகள்

போகிறார்கள். தமிழ்நாடு, 1990ம் ஆண்டுகளிலேயே இத்திட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. அதனடிப்படையில்தான் மத்திய திட்டம் 1995ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பல மாநிலங்கள் அரசுப் பள்ளிகளில் “தானிய ரேஷன்” (80 சதவீத வருகை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மாதம் 3 கிலோ கோதுமை அல்லது அரிசியை வீட்டுக்கு கொடுத்தனுப்பும் திட்டம்) அளிப்பதன் மூலம் இத்திட்டத்திலிருந்து வெளியேறியிருந்தன. 2001 நவம்பர் 28ல் உச்சநீதிமன்றம் அளித்த சிறப்பான தீர்ப்பைத் தொடர்ந்து அந்த மாநிலங்களில், சமைக்கப்பட்ட உணவை குழந்தைகளுக்கு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டியதாயிற்று. மாநில அரசுகளுக்கு நீதிமன்றம் பிறப்பித்த ஆணை வருமாறு:

*பள்ளியின் ஒவ்வொரு நாளும், குறைந்தது 200 நாட்களுக்கு, குறைந்தபட்சம் 300 கலோரி மற்றும் 8-12 கிராம் புரதம் உள்ள, சமைக்கப்பட்ட மதிய உணவை ஒவ்வொரு அரசுப் பள்ளியிலும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கும் வகையில் மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். சமைக்கப்பட்ட உணவுக்கு பதிலாக தானிய ரேஷன் முறையை செயல்படுத்துகிற மாநில அரசுகள், மூன்று மாத காலத்திற்குள் (2002 பிப்ரவரி 28) அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் மாநிலத்தின் பாதி மாவட்டங்களில் (வறுமை காரணமாக) சமைக்கப்பட்ட உணவை வழங்கத் தொடங்க வேண்டும்; அடுத்த மூன்று மாத காலத்திற்குள் (2002, மே 28) மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கும் சமைக்கப்பட்ட உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.*

ஊட்டச்சத்து, உள்கட்டுமானம், நிர்வாகம், கண்காணிப்பு உள்ளிட்ட அம்சங்களில் தமிழ்நாடு ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது (காண்க: பட்டியல்). பல மாநிலங்களால் தமிழ்நாட்டிற்கு ஈடுகொடுக்க முடியவில்லை (தமிழகத்தில் குழந்தைகளுக்கு தினமும் ஒரு முட்டை வழங்கப்படுகிறது என்ற போதிலும், நாடு முழுவதும் இதில் ஒரு தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது (உதாரணமாக ஒடிசா போன்ற ஏழை மாநிலங்களில் கூட வாரத்திற்கு இரண்டு முறை முட்டை வழங்கப்படுகிறது.)

## கவனிக்கப்பட வேண்டிய பகுதிகள்: பழையதும் புதியதும்

முறையான உள்கட்டுமானமின்மை, பணியாளர்களின்மை, உணவின் ஊட்டச்சத்துத் தரம், பொறுப்பேற்பதற்கான கட்டமைப்புகள், சாதிப் பிரச்சனைகள் போன்ற, கடந்த காலத்தில் எழுப்பப்பட்ட பல்வேறு விவகாரங்கள் இப்போதைய துயரத்தைத் தொடர்ந்து மீண்டும் முன்னுக்கு வந்துள்ளன. பல மாநிலங்களில், இப்பிரச்சனைகள் தொடர்பாக அந்த மாநில அரசுகளின் எதிர்வினை பொதுவாக ஆக்கப்பூர்வமானதாகவே (முன்னேற்றங்களின் வேகம் குறைவுதான் என்ற போதிலும்) இருக்கிறது.

துயரம் நிகழ்ந்த பீகார் மாநிலத்திற்கும், ராஜஸ்தான் மாநிலத்திற்கும் இடையேயான முரண்பாடு குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு மாநிலங்களுமே உச்சநீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில் சமைக்கப்பட்ட உணவை வழங்கியதில்லை. ராஜஸ்தானில், 2002 ஜூலையில் பள்ளிகள் திறக்கப்பட்டபோது, இந்த இரண்டு மாநிலங்களிலுமே சமையல் கூடங்கள், தண்ணீருக்கான அடிகுழாய்கள், பாத்திரங்கள் இல்லை; சமையலர்களும் உதவியாளர்களும் இல்லை. தண்ணீர், விறகு கொண்டு வருவது, உணவைச் சமைப்பது போன்ற வேலைகளை ஆசிரியர்களும் மாணவர்களும் செய்தார்கள். “சமைக்கப்பட்ட உணவு” என்றால் உப்பு அல்லது சர்க்கரையுடன் சேர்த்து அவிக்கப்பட்ட கோதுமை (கூக்ரி) மட்டும் தான்.

மதிய உணவுத்திட்டம் குறித்து பத்திரிகையில் அப்போது மிகத் தவறான முறையிலேயே சித்தரிக்கப்பட்டது. எனினும், ராஜஸ்தான் மாநிலம் அதன் பிறகு பெருமளவிற்கு இதில் முன்னேற்றம் கண்டது. சமையலர்களும் உதவியாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அடிகுழாய்களும் சமையல் கூடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பணி பெரும்பாலும் கண்காணிப்பதாகவே இருக்கிறது. கூக்ரி உணவில் தொடங்கி இப்போது வாராந்திர உணவுப் பட்டியல் (வாரத்திற்கு இரண்டு முறை ஒரு பழம் – வாழைப்பழம் அல்லது கொய்யா வழங்குவது உள்பட) செயல்படுத்தப்படுகிறது.

இன்னொரு பக்கம், பீகார் மாநிலம்தான் உச்சநீதிமன்ற ஆணையை கடைசியாகச் செயல்படுத்திய மாநிலமாக இருந்தது. 2005 ஜனவரி 1ல் – நீதிமன்றம் ஆணை பிறப்பித்து முழுதாக மூன்று ஆண்டுகள் கடந்த பிறகு – இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. துயரம் நிகழ்ந்த கந்தாமான் கிராமத்துப் பள்ளியைப் போலவே பள்ளிக் கட்டிடங்கள், சமையல் கூடங்கள், பராமரிப்புக்கான பாத்திரங்கள் போன்றவை இந்த மாநிலத்தின் பல பகுதிகளில் இன்னும் கவலைக்குரியதாகவே உள்ளன. 2006 – 07ஆம் ஆண்டுக்கான திட்டக்குழு அறிக்கை, ஜார்க்கண்ட், கர்நாடகம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே “குறைந்த” மட்டத்திலான திருப்தி நிலை உள்ளது என்று தெரிவிக்கிறது.

**பட்டியல் : மதிய உணவுத் திட்டம் – தமிழ்நாட்டுடன் பீகார், ராஜஸ்தான் ஒப்பீடு**

| | பீகார் | ராஜஸ்தான் | தமிழ்நாடு |
|---|---|---|---|
| தங்கள் வீடுகளில் ‘ஒருபோதும்’ இதை சாப்பிட்டதே இல்லை என்று கூறிய குழந்தைகள் (%) | | | |
| பழங்கள் | 43 | 19 | 25 |
| பால் | 56 | 19 | 31 |
| வழங்கப்படும் உணவின் தரம் ‘நன்றாக’ இருக்கிறது என்று கூறியவர்கள்(%) | | | |
| குழந்தைகள் | 6 | 80 | 85 |
| பெற்றோர் | 3 | 81 | 65 |
| கண்காணிப்பதிலும், பறிமாறுவதிலும் ஒரு நாளில் செலவழிக்கப்பட்ட நேரம் | 2.23 | 0.95 | 0 |
| பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ள பள்ளிகள் (%) | | | |
| குடிநீர் | 93 | 95 | 100 |
| சமையல் கூடம் | 14 | 37 | 95 |

**ஆதாரம்:** *இந்திய அரசின் அறிக்கை (2010), பட்டியல்கள் 3.7- 3.9, 5.2 - 5.3 ஆய்வுக்காலம் 2006 - 07; தேசிய கல்வித் திட்டம் மற்றும் நிர்வாகப் பல்கலைக் கழகம் (2013).*

உண்மையில், பெரும்பாலான மாநிலங்களில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிற பாதை பீகாரைப் போல அல்லாமல் ராஜஸ்தானைப் போல அமைந்துள்ளது. பீகார் மாநிலத்தில் கூட ஓரளவுக்கு நல்ல அம்சங்கள் உள்ளன. அங்கு உணவு தொடர்ச்சியாக வழங்கப்படுகிறது. வேறு உணவுப் பாதுகாப்பு திட்டங்களைவிட மதிய உணவு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. கடந்த காலங்களில் குறைந்த வேகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த கால சுமைகள் இருந்து வந்திருப்பதால் இங்கு முழு முன்னேற்றம் ஏற்பட சிறிது காலம் ஆகலாம். கவலை தருகிற மற்றொரு அம்சம் ஊடகங்களின் பங்களிப்பாகும். பீகார் துயரம் பற்றிய செய்தி வெளியான உடனேயே, நாட்டின் பல பகுதிகளில் வழங்கப்படும் உணவின் மோசமான தரம் குறித்த செய்திகள் வரத் தொடங்கிவிட்டன (கோவா, மஹாராஷ்டிரா, ஒடிசா, ஏன் தமிழ்நாடும் கூட செய்திகளில் அடிபட்டன). இந்த மாநிலங்களில் சொல்லப்பட்ட பிரச்சனைகள் எதுவும் கடுமையானவையாக இல்லை. தமிழ்நாட்டில் மதிய உணவு சாப்பிட்டக் குழந்தைகள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த உடனேயே ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இந்த செய்திகள் கடுமையானவையாக இல்லை என்றாலும், நாட்டின் வேறு பல பகுதிகளில் மதிய உணவின் குறைந்த தரம், மோசமான உள்கட்டுமானம், மோசமான சுகாதார நிலை ஆகியவை ஆய்வாளர்களாலும் சமூகப் பணியாளர்களாலும் சிறிது காலத்திற்கு மீண்டும் மீண்டும் முன்னுக்குக் கொண்டுவரப்பட்டன. பீகார் சம்பவத்தில் குழந்தைகள் இறந்து போகும் வரையில், இந்த ஆய்வுகள் ‘‘செய்தியாக்கத் தகுந்தவைதான்’’ என்று ஊடகங்கள் (குறிப்பாக ஆங்கில ஏடுகளும் மின்னணு ஊடகங்களும்) ஏன் கருதவில்லை? ஊடகங்கள் தங்களது ‘‘கண்காணிப்பாளர்’’ பாத்திரத்தை நிறைவேற்ற தவறுகின்றன என்பதையே இது காட்டுகிறது.

மேலும், அறிவுப்பூர்வமான விவாதங்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய தகவல்களைப் பரப்புகிற கடமையும் ஊடகங்களுக்கு இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட துயரச் சம்பவங்கள் நடக்கிறபோது மட்டுமே செய்தியாக்குகிறபோது, வாசகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இத்திட்டம் குறித்த தவறான எண்ணம்தான் ஏற்படுத்தப்படுகிறது. (செய்தியாக்குவதில் உள்ள இந்த சமநிலையற்ற தன்மை, அடுத்தடுத்த செய்திகளால் ஓரளவுக்காவது சரிசெய்யப்பட்டது.)

இதனிடையே, இந்தத் திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் அதிகரித்தன. 2013–14ல் மத்திய அரசு இதற்கு ரூ.13, 700 கோடி ஒதுக்கியது. இதைத் தொடர்ந்து மதிய உணவுத் திட்ட ‘‘சந்தை’’ மீது தனியார் நிறுவனங்களின் கண் விழுந்தது. 2008ம் ஆண்டில் ‘‘பிஸ்கெட் தயாரிப்பாளர்கள் சங்கம்’’ என்ற அமைப்பு, இந்தத் திட்டத்தை விமர்சித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியது. மதிய உணவிற்கு பதிலாக ஊட்டச்சத்து பிஸ்கெட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சம்பந்தப்பட்ட அமைச்சகத்துக்கு அந்தக் கடிதத்தை அனுப்பி வைத்தனர். நன்றிக்குரிய செயலாக, அந்த ஆலோசனை நிராகரிக்கப்பட்டது (தினமும் மதியம்

சாப்பாட்டிற்கு பதிலாக பிஸ்கெட்டுகளை சாப்பிடுவது பற்றி யாராவது கற்பனை செய்தாவது பார்க்க முடியுமா ?)[3] மேலும், இதற்கு பொறுப்பான அமைப்புகளை ஏற்படுத்துவதும் கடினமாக இருக்கிறது. ஏனென்றால், ஒப்பந்ததாரர்கள் பலர் அரசியல் பின்னணி உள்ளவர்கள். உத்திரப் பிரதேசம் மாநிலத்தில் அங்கன்வாடிகளுக்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கும் ஒப்பந்தத்தை வளைத்துக்கொண்டவர் காலம் சென்ற பாண்டி சாதா. அந்த மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டப் பிறகும் கூட அவரது ஒப்பந்தத்தில் மீது கை வைக்கப்படவில்லை. தரமற்ற உணவுப் பொருள்களை அவர் விநியோகித்து வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே போன்ற பிரச்சனைகள் தில்லியிலும் ஏற்பட்டன. அங்கு சமைக்கப்பட்ட உணவை விநியோகிப்பதற்கான மையப்படுத்தப்பட்ட சமையல் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும், ஏன் ஆசிரியர்களுக்கும் கூட, எங்கே சென்று புகார்களைத் தெரிவிப்பது என்று தெரியவில்லை. அடிக்கடி சோதனை செய்யப்பட்டு, உணவுப் பொருள்கள் தரமில்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட அதை சரிப்படுத்துவதற்கு எதுவும் செய்யப்படவில்லை. இத்தகைய திட்டங்களில் தனியார் நுழைவதன் அபாயத்தை இந்த எடுத்துக்காட்டுகள் உணர்த்துகின்றன. ஒப்பந்ததாரர்கள் லாபத்திற்காக மட்டுமே வருகிறார்கள். அதற்காக எந்த அற்பத்தனத்தையும் செய்ய அவர்கள் தயங்க மாட்டார்கள்.

பீகார் துயரத்திலிருந்து குறைந்தது 4 படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒன்று, முன்னணி மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளை கவனித்து அதற்கேற்ப நிர்வாக ஏற்பாடுகளும் கண்காணிப்பு ஏற்பாடுகளும் சீரமைக்கப்பட வேண்டும். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்திட, குழந்தைகளின் மரணத்திற்குக் காரணமானவர்கள் அனைவரின் மீதும் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இரண்டு, பொதுவாக கிராமப்புற பிரச்சனைகள் குறித்து, குறிப்பாக (மதிய உணவு திட்டம் போன்ற) சமூக பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து ஊடகங்கள் செய்தி வெளியிடுவதில் உள்ள ஏற்றத்தாழ்வு சரி செய்யப்பட வேண்டும். மூன்று, பெரும்பாலும் எப்படியாவது லாபம் ஈட்டினால் போதும் என்ற நோக்கத்துடன், ‘‘அரசு – தனியார் கூட்டு’’ என்ற பெயரில், நுழைகிற தனியார் நிறுவனங்கள், ‘‘சுய உதவிக் குழுக்கள்’’ என்று சொல்லிக்கொள்கிற போலியான அமைப்புகள் போன்ற சுயநலவாதிகள் குறித்து அரசாங்கம் விழிப்புடன் இருக்க வேண்டும். நான்கு, (ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு போன்ற) பல்வேறு எடுத்துக்காட்டு மாநிலங்களிலிருந்து, பின்தங்கிய மாநிலங்கள் பாடம் கற்றுக்கொண்டு, தாங்கள் வழங்கும் உணவின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்த வேண்டும்; மற்ற மாநிலங்களுக்கு ஈடாக மாறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பீகார் துயரம் சில மாநிலங்களில் ஊட்டச்சத்து இல்லாத உணவைச் சாப்பிடுகிற குழந்தைகளின் அன்றாட அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கலாம். ஒரு நாளுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 5 செலவில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம், எதிர்காலத்திற்காக மாநிலங்கள் செய்கிற சிறந்த முதலீடாக இருக்கும் என்பது நிச்சயம்.

This is an expanded and revised version of an article that was published in The Times of India, 21 July 2013. I would like to thank Jean Drèze and Abhijeet Singh for their inputs.

Reetika Khera (reetika.khera@gmail.com) is at the Institute of Economic Growth on a ThinkTank Initiative Associate Professor Fellowship.

**குறிப்புகள்:**

1. பீகார் உணவு உரிமை பிரச்சார அமைப்பின் உண்மையறியும் குழு அளித்துள்ள அறிக்கையிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது. (2013).
2. மதிய உணவுத் திட்டத்தின் ஆக்கப்பூர்வ தாக்கங்கள் குறித்த ஆதாரங்களுக்கு டிரேஸ் மற்றும் கோயல் (2003), கிண்ட் கான் (1999), கேரா (2006) ஆகியோரது அறிக்கைகளைக் காண்க.
3. இதுகுறித்த கருத்துகள் ஏற்கெனவே வந்துள்ளன. பென்ட்டால் (2003) அறிக்கையைக் காண்க. தயார் நிலை உணவு வழங்கப்படும்போது பள்ளிச் சேர்க்கை, வருகை, குழந்தைகளின் கூட்டுப் பழக்கம் சத்துணவு குறித்த கல்வியறிவு போன்றவை பயனுள்ள அளவிற்கு அமைவதில்லை என்று அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**கட்டுரையாளர்:** பொருளாதார வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தில் ஒரு போராசிரியராக உள்ளார்

**References:**

Afridi, Farzana (2005): “Mid Day Meals in Two States: Comparing the Financial and Institutional Organisation of the Programme”, Economic & Political Weekly, Mumbai, Vol XL, (15). (2010): “Child Welfare Programs and Child Nutrition: Evidence from a Mandated School Meal Program”, Journal of Development Economics

, Vol 92, No 2, pp 152-65, July. (2011): “The Impact of School Meals on School Participation in Rural India”, Journal of Development Studies (Special Section on Impact Evaluation), Vol 47, No 11, pp 1636-56, November. Afridi, Farzana, Bidisha Boruah and Rohini Somanathan (forthcoming): “Learning Effects of Supplementary School Feeding Programs”, Delhi School of Economics, mimeo. Drèze, Jean and Geeta Gandhi Kingdon (1999): “School Participation in Rural India”,

Review of Development Economics , Vol 5 (No 1), pp 1-24. Drèze, Jean and Aparajita Goyal (2003): “The Future of Mid-Day Meals”, Economic & Political Weekly

, Vol 38 (No 44), 1 November. Drèze, Jean and Reetika Khera (2008): “Glucose for the Lok Sabha”, Hindustan Times , 14 April.Government of India (2010):

Programme Evaluation Report on Mid-Day Meals (New Delhi: Planning Commission). Khera, Reetika (2006): “Mid-Day Meals in Primary Schools: Achievements and Challenges”, Economic & Political Weekly , Vol 41, (No 46), 18 November. Jayaraman, Rajshri and Dora Simroth(2011): “The Impact of School Lunches on Primary School Enrollment: Evidence from India's Midday Meal Scheme”, ESMT 11-11.National University of Education Planning and Administration (2013): “Elementary Education in India, Where Do We Stand?”, State Report Cards, 2011-12 (New Delhi: National University of Education Planning and Administration).

Right to Food Campaign Bihar (2013): Fact Finding Report on Gandaman, Saran District . Singh, Abhijeet (2013): “The Indian School Lunch Deaths are Tragic, But We Must Not Lose Perspective”, Poverty Matters Blog, The Guardian . Available online http://tinyurl.com/oa7jrst Singh, Abhijeet, Albert Park and Stefan Dercon

(forthcoming): “School Meals as a Safety Net: An Evaluation of the Mid-Day Meal in India”, Economic Development and Cultural Change.

**ஆதாரம்: ஆகஸ்ட், 10 2013 VOL XLVIII NO 32**
**Economic & Political WEEKLY**

## பள்ளி விடுதியில் மாணவி தற்கொலை

அடையாறு சாஸ்திரி நகரில் உள்ள பள்ளி விடுதியில் மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை அருகேயுள்ள குன்றத்தூர் எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்தவர் தெய்வநாயகி. இவரது மகன் சந்திரசேகரும், மருமகளும் இறந்துவிட்டனர். இவர்களது 2 மகள்களை தெய்வநாயகி வளர்த்து வந்தார். இளைய மகள் சரண்யா.

சென்னை சாஸ்திரி நகரில் உள்ள பள்ளியில் சரண்யா (15) பத்தாம் வகுப்பு படித்து வந்தாள். இதற்காக, அங்குள்ள விடுதியிலேயே தங்கியிருந்தாள். நேற்று காலை விடுதியில் சரண்யா இல்லை. உடன் தங்கியுள்ள மாணவிகள் அவரை தேடி அலைந்தனர். தகவல் தெரியாததால் விடுதி வார்டனிடம் தெரிவித்தனர். அவரும் மாணவியை தேடினார். அப்போது விடுதியின் ஓரமாக ஒரு அறையில் மின்விசிறியில் சரண்யா தூக்கில் பிணமாக தொங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதுபற்றி சாஸ்திரி நகர் காவல்நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர். இன்ஸ்பெக்டர் கிறிஸ்டின் ஜெயசீல் விரைந்து சென்று மாணவியின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர். அதில், பட் ரோட்டில் 8ம் வகுப்பு வரை சரண்யா படித்துள்ளார். ஆஸ்டலுக்கு சென்று படிப்பதை அவள் விரும்பவில்லை.

எனவே ஒரு நோட்டில், நான் ஜெயிலுக்கு செல்கிறேன் என தான் தங்கியுள்ள விடுதியின் பெயரை குறிப்பிட்டு எழுதி இருந்தார். ஆஸ்டலில் தங்கி படிப்பது பிடிக்காததால் அவள் தூக்கு போட்டு தற்கொலை செய்திருக்கலாம் என போலீசார் கருதுகின்றனர். விடுதியில் மாணவி தூக்கு போட்டு தற்கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**ஆதாரம்: தினகரன், 30.7.2013**

# யூனிசெப் - குழந்தைத் திருமணம்: மனித உரிமை மீறல்

“பக்குவம் அடைவதற்கு முன்பே கர்ப்பம், தாய்மை ஆகியவை குழந்தைத் திருமணத்தின் தவிர்க்க முடியாத பின் விளைவுகளாகும். 20 வயதிற்கு மேற்பட்ட பெண்களைவிட, 15 வயதிற்குக் குறைந்த சிறுமிகள் கர்ப்ப காலத்திலும், பிரசவத்தின்போதும் உயிரிழக்கிற வாய்ப்பு அதிகமாக உள்ளது.”—ஐக்கிய நாடுகள் சர்வதேச குழந்தைகளுக்கான அவசரக்கால நிதி (யூனிசெப்) அமைப்பின், உலகக் குழந்தைகள் நிலைகுறித்த அறிக்கை, 2007

குாந்தைத் திருமணம் என்பது 18 வயதிற்கு முன் நடத்தி வைக்கப்படும் திருமணமாகும் என்றும், இது மனித உரிமைகளை மீறுகிற ஒரு நடைமுறையாகும் என்றும் யூனிசெப் வரையறுக்கிறது. குழந்தைத் திருமணத்தின் தீங்கான பின் விளைவுகள் என்னவென்றால், குடும்பத்திடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் குழந்தைகள் பிரிக்கப்படுகிறார், சமூகத்துடனும் நண்பர்களுடனும் குழந்தைகள் கலந்து பழகுவது கட்டுப்படுத்தப்படுகிறது. கல்விக்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது. குழந்தைத் திருமணத்தின் விளைவாக பெண் குழந்தைகள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை, அடிமைத்தனம், வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டல், வன்முறை ஆகிய பாதகமான நிலைமைகளை எதிர்கொள்கிறார்கள்.

சரியான பாதுகாப்பு இல்லாமல் போவதால் பெண் குழந்தைகள் கடுமையான உடல் கோளாறுகளுக்கு உள்ளாகிறார்கள், பருவத்திற்கு முன்பே கர்ப்பவதியாகிறார்கள், குறிப்பாக எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளிட்ட பல்வேறு பாலியல் நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். பொருளாதாரத் தேவை, தங்களது புதல்விகளுக்கு ஆண் பாதுகாப்புத் தேவை என்ற எண்ணம், வாரிசு வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, பாரம்பரியமான ஒடுக்குமுறை மரபுகளும் நடைமுறைகளும் என பெற்றோர்கள் எதற்காக குழந்தைத் திருமணத்தை நாடுகிறார்கள் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

உலக அளவிலேயே 20 முதல் 24 வயது வரையிலான பெண்களில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானோர் 18 வயதிற்கும் முன்பாகவே திருமணமானவர்களாவர். 15 முதல் 19 வயது வரையிலான, பதின்பருவ பெண்களில் சுமார் ஒரு கோடியே 40 லட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் குழந்தை பெறுகிறார்கள். இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் பிரசவத்தின்போது மரணம் அடையும் வாய்ப்பு, 20களில் உள்ள பெண்களைவிட இருமடங்காகும். சஹாரா ஆப்பிரிக்க நாடுகளிலும், தெற்கு ஆசியாவிலும் குழந்தைத் திருமண விகிதம் மிக அதிகமாக இருக்கிறது.

இந்தியாவில் 2001ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 15 வயதிற்குக் குறைந்த பெண்களில் சுமார் 15 லட்சம் பேர் ஏற்கெனவே திருமணமானவர்கள். இவர்களில் 20 சதவீதத்தினர் அல்லது சுமார் 3 லட்சம் பேர் குறைந்தது ஒரு குழந்தைக்காவது தாயாக இருக்கிறார்கள். பெண்களின் சராசரி திருமண வயது 18.3ஆக உயர்ந்துள்ளது என்றும் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கூறுகிறது. ஆண்களுக்கான சராசரி வயது 22.6 ஆகும். ஆனால், நாடு முழுவதுமே குழந்தைத் திருமணங்கள் இன்னமும் பரவலாக நடைபெறுகின்றன.

ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்போதும் பெண்களின் சராசரி திருமண வயது சட்டப்பூர்வ வயதான 18க்குக் குறைவாகவே உள்ளது. தங்களுடைய உடல், பிரசவ அழுத்தங்களை தாங்குவதற்கு ஏற்றவகையில் பக்குவப்படுவதற்கு முன்பாகவே கர்ப்பமாகிவிடுவதால், பதின்பருவ பெண்களுக்கு குறைப்பிரசவம் நிகழ்கிறது அல்லது எடைக் குறைவான குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தை, தாய் இருவருமே அபாய நிலைக்கு உள்ளாகிறார்கள். இருவருமே உயிர் பிழைக்க முடியாமல் போகிறது. குழந்தைத் திருமணங்கள் பெரும்பாலும் பெண் குழந்தைகளை குடும்ப வன்முறை, பாலியல் அத்துமீறல்கள், வன்கொடுமைகள், தொடக்கக் கல்வியைக்கூட முடிக்க முடியாமல் போவது போன்ற நிலைமைகளுக்குத் தள்ளுகிறது. குழந்தைத் திருமணங்கள் அதிகமாக நிகழும் மாநிலங்களில், சிசு மரண விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய குடும்பநல ஆய்வு – 3. அறிக்கையின்படி, 20 – 24 வயதுப் பிரிவு பெண்களில் 47.3 சதவீதத்தினர் 18 வயதிற்குள் திருமணம் செய்துகொள்கிறார்கள். அவர்களில் 2.6 சதவீதத்தினர் 13 வயதிற்கும் குறைவாக இருக்கும்போதே திருமணமானவர்கள். 44.5. சதவீதத்தினர் 16, 17 வயதுகளில் திருமணமானவர்கள். சில மாநிலங்களில் இந்த சதவீதம் மிக அதிகமாக இருக்கிறது: ராஜஸ்தான் 65.2% , உத்தரபிரதேசம் 58.6%, மத்திய பிரதேசம் 57.3%, ஜார்க்கண்ட் 63.2%, சத்தீஸ்கர் 55%, பீகார் 69%, ஆந்திர மாநிலம் 54.8%. குழந்தைத் திருமணங்கள் குறைவாக உள்ள மாநிலங்கள்

இமாச்சலப் பிரதேசம் 12.3%, பஞ்சாப் 19.7%, கேரளம் 15.4%.

இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள், மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பதின்பருவ பெண்கள் அதிக அளவிற்கு கர்ப்பமடையும் வாய்ப்பிருப்பதாலும் தேவையற்ற கர்ப்பங்கள் மிக அதிகமாக ஏற்படுவதாலும் இந்த நிலைமை உருவாகிறது. எந்த மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் அதிகமாக நடக்கின்றனவோ அந்த மாநிலங்கள்தான் அதிக மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன.

உயர்கல்வி வாய்ப்புகளும் பள்ளிக்கல்வி வாய்ப்புகளும் கிடைக்கப்பெற்ற பெண்களிடையே குழந்தைத் திருமணம் குறைவாக இருக்கிறது. பொதுவாக இந்தியாவில் திருமணங்கள் பதிவு செய்யப்படுவதில்லை. சட்டப்பூர்வமாக இல்லாவிட்டாலும் சமூக ரீதியாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனால், குழந்தைத் திருமணங்களைக் கண்காணிப்பது கடினமாக இருக்கிறது.

2006ல் இந்திய அரசு குழந்தைத் திருமணம் தொடர்பான சட்டங்களில் திருத்தம் கொண்டுவந்து, குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் – 2006 நிறைவேற்றப்பட்டது.

**ஆதாரம்: www.childlineindia.org.in**

## ஆய்வு முடித்த பின்னரே மாணவர்களுக்கு உணவு வழங்க வேண்டும்: நல துறை விடுதி வார்டன்களுக்கு உத்தரவு

ஒவ்வொரு வேளையும், சமைக்கும் உணவின் மாதிரியை, சமைத்து முடித்த இரண்டு மணி நேரம் வரை, ஆய்வுக்காக விடுதியில் வைக்க வேண்டும். ஆய்வு முடிந்த பின்னரே, மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உத்தரவிட்டு உள்ளது.

நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டியில், அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளி அருகே அமைந்துள்ள, பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியில், 50 பேர் தங்கி, படித்து வருகின்றனர். சமீபத்தில், மாணவியருக்கு வழங்கப்பட்ட காலை உணவில், இட்லி பாதி வேகாமலும், சாம்பார் தண்ணீர் போல காணப்பட்டதுடன், மஞ்சள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. காலை உணவு சாப்பிட்ட அரை மணி நேரத்தில், மாணவியருக்கு தலைவலி ஏற்பட்டது.

ஒரு மாணவி வாந்தி எடுத்த நிலையில், அடுத்தடுத்து மாணவியர் வாந்தி எடுத்ததுடன், வயிற்று போக்கும் ஏற்பட்டது. இதை தொடர்ந்து, சமையலர், "சஸ்பெண்ட்' செய்யப்பட்டார். இந்நிலையில், தமிழகத்தில் உள்ள, அனைத்து பிற்படுத்தப்பட்ட நல விடுதி வார்டன்களுக்கு, நலத் துறை ஆணையர், புதிய உத்தரவு பிறப்பித்து உள்ளார். வார்டன்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

* அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவில், வாராந்திர உணவு முறைப்பட்டியலின் படி, தரமான உணவு வழங்கப்படுகிறதா என, கண்காணிக்க வேண்டும்.
* சமையலறை, சுத்தமான முறையில் பராமரிக்க வேண்டும்.
* சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள், எந்தவிதமான கலப்படமுமின்றி, தரமாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
* கடமை உணர்வோடு, வார்டன்கள் தரமான உணவுகளை வழங்க வேண்டும்.
* ஒவ்வொரு வேளையும், சமைக்கும் உணவின் மாதிரியை சமைத்து முடித்த, இரண்டு மணி நேரம் வரை, ஆய்வுக்காக விடுதியில் வைக்க வேண்டும்.
* சமைத்த உணவுகளை, வார்டன்கள் ருசி பார்த்த பின்னரே, மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு, அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வார்டன்கள் ருசி பார்க்க, இரண்டு மணி நேரம் தேவையா என்ற கேள்வி எழுகிறது. சமைத்த பின் தான், ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றால், அதன் உள்ளீட்டுப் பொருட்களின் தரத்தை, முன்கூட்டியே அறிய வேண்டும் என்பதில், சமையலர்கள் ஆர்வம் காட்ட மாட்டார்கள் என்பதை, உத்தரவிட்டவர்கள் உணரவில்லை என்றே தோன்றுகிறது. மக்கள் நலனுக்காகத் தீட்டப்படும் எந்தத் திட்டமும், சரியான முறையில் வடிவமைக்கப் படுவதில்லை என்பது, இதன் மூலம் விளங்குகிறது.

**ஆதாரம்: தினமலர், 27 ஜூலை 2013**

# நம் குழந்தைகளுக்கு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

– நிஷிதா ஜா, ரேவதி லால்

தலைநகர் தில்லியில் ஒரு மருத்துவ மாணவி ஒரு கும்பலால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி உலகத்தையே குலுக்கியதற்கு மறுநாள், 2012 டிசம்பர் 17 அன்று மூன்றரை வயது பெண் குழந்தை பள்ளியிலிருந்து திரும்பி வந்தாள் – அவளது ஆடைகளில் வாந்திக் கறையும் ரத்தக் கறையும் படிந்திருந்தன.

அந்தக் குழந்தையின் தந்தை காகன் சர்மா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), கொல்கத்தாவிலிருந்து ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடி 2003ல் மேற்கு தில்லிக்கு குடி பெயர்ந்திருந்தார். அந்தக் குழந்தை உற்சாகம் இழந்தவளாக, வாரக் கணக்கில் பள்ளிக்கூடம் செல்லத் தயங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய தாயார் என்ன நடந்தது என்று கேட்டபோது, அவள் தனது கதையை தட்டுத் தடுமாறி பயந்து நடுங்கிக்கொண்டே சொன்னாள்.

அவளுக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை மிக பயங்கரமானது. அதன்பிறகு நடந்ததும் பயங்கரமானதுதான். காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைப்பதற்கு 12 மணி நேரத்திற்கு மேல் ஆனது என்று குழந்தையின் பெற்றோர் தெரிவித்தார்கள். ''மானக் கேடான'' ஒரு குடியிருப்புப் பகுதியில் அவர்கள் வசித்துக்கொண்டிருப்பதாக, காவல் நிலையத்தின் பெண் துணை ஆய்வாளர் இழிவாகப் பேசினார். பெற்றோர் இருவரும் மரியாதைக்கு உரியவர்கள்தானா என்று கேள்வி எழுப்பப்பட்டது. மூன்று காவலர்கள் முன்னிலையில் அந்தக் குழந்தை தனக்கு நடந்ததை மீண்டும் மீண்டும் சொல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டாள். ''உண்மையைச் சொல்லு, இல்லாவிட்டால் உன் உடம்பெல்லாம் பூச்சு மொய்க்கும். உன் அம்மாவும் அப்பாவும் அடிவாங்குவார்கள்,'' என்று அந்த பெண் துணை ஆய்வாளர் குழந்தையிடம் தனது விசாரணையைத் தொடங்கினார்.

இப்படிப்பட்ட பயமுறுத்தல்களையும் மீறி அந்தக் குழந்தை, தனது பெற்றோரிடம் என்ன சொன்னாலோ அதையேதான் இப்போதும் சொன்னாள். அமர்வு நீதிமன்றத்தில் மீண்டும் அவளிடம் கேள்விகள் வீசப்பட்டன. அப்போதும் அவள் தனது கதையைச் சொன்னாள். ஆனால், அவளுக்கு மருத்துவ சோதனை செய்தவர், வன்புணர்ச்சி எதுவும் நடக்கவில்லை என்று கூறி ஒரு வெற்று அறிக்கையைக் கொடுத்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் பிப்ரவரி 28 அன்று ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இன்னொரு பக்கம் காகன் சர்மாவின் வீட்டு உரிமையாளர், வீட்டைக் காலி செய்துவிட்டு போகுமாறு கட்டாயப்படுத்தினார். காகன் சர்மாவின் குடும்பம் எப்போதும் வழக்கோடு போராடிக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு பணக்கார சுரங்க முதலாளியின் 16 வயது மகள் தனது ஆசிரியர்களிடமும் முதல்வரிடமும், தன்னை தனது தகப்பனாரே பல இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்றதாகவும், நாட்டின் பல இடங்களில் உள்ள பெயர் தெரியாத ஓட்டல் அறைகளில் வைத்து தன்னை வன்புணர்ச்சி செய்ததாகவும் தெரிவித்தாள். தனது தாயை தகப்பன் அடிப்பதுண்டு என்றும் கூறினாள். தகப்பன் அவளை துபாய்க்கு கொண்டு செல்ல இருந்தபோது அவன்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. குழந்தை நல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அந்தச் சிறுமியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், அவளுடைய உறவினர்கள் தங்களால் முடிந்ததைச் செய்தார்கள். வீட்டின் கதவுகளை இழுத்து மூடியிருந்தார்கள். அவருடைய தகப்பன் குடும்பத்தினர் முன்னிலையிலேயே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டாலும் கூட, அந்தச் சிறுமி இப்போது வாய் திறக்க மறுத்துவிட்டாள். தாயும் மகளும் நீதிமன்றத்தில் தங்களது புகாரை விலக்கிக்கொண்டுவிட்டனர்.

### குழந்தைகளும் பாலியல் அத்துமீறல்களும்:

பத்தே ஆண்டுகளில் 48, 838 குழந்தைகள் வன்புணர்வு செய்யப்பட்டுள்ளனர். தேசிய குற்றப்பதிவு நிறுவனம் தெரிவித்துள்ள இந்தப் புள்ளி விவரமே நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. ஆனால், இது நாட்டில் உண்மையிலேயே குழந்தைகளுக்கு எதிராக நடக்கிற வன்புணர்வு கொடுமைகளில் 25 சதவீதம்தான் என்பதை எண்ணிப் பாருங்கள். இவற்றில் வெறும் 3 சதவீத குற்றங்கள் மட்டுமே காவல்துறையிடம் பாதிவாகின்றன. குழந்தைகள் வன்புணர்வுக்கு உள்ளாவது என்பது 2001ம் ஆண்டில் இருந்த நிலையிலிருந்து 2011ம் ஆண்டில் 336 சதவீதம் அதிகரித்துவிட்டது என்ற மனதை உறைய வைக்கும் செய்தியின் அர்த்தம் என்னவென்று நினைக்கிறீர்கள்.

இதையெல்லாம் சிந்தித்தால், இந்தியாவில் எவ்வளவு ஆழமாக குழந்தைகளுக்கு எதிராக, மனித நேயமற்ற முறையில் பாலியல் வன்கொடுமைக் குற்றம் நிகழ்கிறது



Source: http://www.deccanchronicle.com

என்பது நமக்கு உறைக்கத் தொடங்கும். மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு 2007ம் ஆண்டில் ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் 13 மாநிலங்களைச் சேர்ந்த 12,500 குழந்தைகளிடம் அரசாங்கமே நடத்திய ஒரு ஆய்வு பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி 57 சதவீத குழந்தைகள் – அதாவது இரண்டில் ஒரு குழந்தைக்கும் மேல் தாங்கள் எதாவது ஒரு வகையில் பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்திருந்தனர். இக்குழந்தைகளின் 20 சதவீதத்தினர், கடுமையான வக்கிரங்களுக்கு உள்ளானதை வெளிப்படுத்தியிருந்தனர். தங்கள் மீது உடலுறவு நிகழ்த்தப்பட்டது, வயதில் மூத்தவர்களிடம் பாலியல் தன்மையோடு நடந்துகொள்ள கட்டாயப்படுத்தப்பட்டது, தங்களது பிறப்புறுப்புகளை காட்ட வற்புறுத்தப்பட்டது போன்ற அத்துமீறல்களை அவர்கள் தெரிவித்தனர். குழந்தைகளுக்கு எதிரான பாலியல் அத்துமீறலைப் பொறுத்தவரையில் அதில் பாலின வேறுபாடு கிடையாது! தங்களுக்கு பாலியல் வன்கொடுமை இழைக்கப்பட்டதாக கூறிய 57 சதவீத குழந்தைகளில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஆண் குழந்தைகள்தான்.

ஆக, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்கள் இங்கு சர்வசாதாரணமாக, பாகுபாடு இல்லாமல், வர்க்கம், புவியியல், பண்பாடு, மதம் என்ற அடையாளங்களைத் தாண்டி நடைபெறுகின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இது நகரங்களிலும் நடக்கிறது, கிராமங்களிலும் நடக்கிறது. தகப்பன்மார்கள், சகோதரர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார், ஆசிரியர்கள், அந்நியர்கள் என அனைத்துத் தரப்பினருமே இந்தக் கொடுமையைச் செய்கிறார்கள்.

குழந்தை உரிமைகள் அமைப்பாகிய ஹக் அமைப்பின் இணை இயக்குநர் ஈனாக்ஷி கங்குலி கூறுவது வருமாறு: ''குடிசைப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள் நிச்சயமாக இந்த வன்முறைக்கு இலக்காகக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால், பெரும்பாலும் அவர்களது தாய், தந்தை இருவருமே வேலைக்குப் போய்விடுகிறார்கள். குழந்தைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கான இடம் எதுவும் அவர்களுக்கு இல்லை. அதே நேரத்தில், நடுத்தரவர்க்க, உயர் நடுத்தரவர்க்க குடும்பங்களின் குழந்தைகளும் பாலியல் அத்துமீறலுக்கு உள்ளாகக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் மூடப்பட்ட சமூகத்தில் வாழ்கிறார்கள், தங்களுக்கு நேர்ந்தது பற்றி பேசுவதற்குக் கூட அவர்களுக்கு யாரும் கிடைப்பதில்லை. குடும்ப மரியாதையை காப்பாற்றியாக வேண்டும், எனவே, எதையும் வெளியே பேசக்கூடாது என்ற கறாரான குடும்ப நிர்ப்பந்தங்களுக்கு அந்தக் குழந்தைகள் உள்ளாகிறார்கள்.''

பிரச்சனையின் மையத்தை சுட்டிக்காட்டுகிறார் சமூகவியலாளர் ஷிவ் விஸ்வநாதன்: ''இந்தியக் குடும்ப அமைப்பு ஆழ்ந்த நெருக்கடியில் இருப்பதாக நான் நினைக்கிறேன். வக்கிரங்கள், பாலியல் கொடுமைகள், மவுனங்கள் என நமது குடும்பங்களில் நிகழும் வன்முறைகள், கடுமையான நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. அதனால், நாம் அதையெல்லாம் கவனிப்பதில்லை, சொல்லப்போனால் அதையெல்லாம் கவனிக்க விரும்புவதில்லை. இத்தகைய சம்பவங்களின் 'மானப் பிரச்சனை' பற்றி மட்டுமே நாம் கவலைப்படுகிறோம். ஆனால், இது தினம் தினம் நடைபெறுகிற அவமானம். இப்படி இது அன்றாட நிகழ்வாக இருக்கிறது என்பதை நாம் காணத் தவறுகிற வரையில், இது எவ்வளவு கொடூரமானது என்பதை யாருமே புரிந்துகொள்ளப் போவதில்லை.''

**காவல் நிலையங்களின் செயல்பாடு:**

இன்னொரு கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்தியாவில் நிகழும் குழந்தை பாலியல் கொடுமைக் கதை, ஆழமாக வேரூன்றியுள்ள அலட்சியத்தின் கதையாகவும் இருக்கிறது. கிழக்கு தில்லியில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட ஐந்து வயதுக் குழந்தையின் பெற்றோர், தங்களுடைய குழந்தையைக் காணவில்லை என்று அறிந்துகொண்டு காவல்நிலையத்திற்குச் சென்றார்கள் என்றபோதிலும் கூட காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அவர்கள் மறுத்துவிட்டார்கள். குழந்தையைத் தேடுவதற்கான சிறு முயற்சியைக்கூட அவர்கள் செய்யவில்லை. கடைசியில், அந்தக் குழந்தையின் நீண்ட நேர அழுகுரல்தான், அவள் இருக்கும் இடத்திற்குப் பக்கத்து வீட்டுக்காரர்களை இட்டுச் சென்றது. பெற்றோர் எந்தக் கட்டிடத்தில் வசித்தார்களோ அதே கட்டிடத்தின் வேறொரு அறையில்தான் அந்தக் குழந்தை அடைத்து வைக்கப்பட்டிருந்தாள்.

செய்தியாக வெளிவந்த இந்த சம்பவங்கள் நமக்கு இந்த அளவிற்கு அதிர்ச்சி அளிக்கிறதென்றால் எத்தனையோ குழந்தைகளுக்கு நேரும் அவலங்கள் வெளியே தெரியாமலே போய்விடுகிறது என்பதை என்ன சொல்வது? இந்தியாவில் வன்புணர்வுக்கு உள்ளாகும் குழந்தைகளின் கதை, இந்தியாவில் குழந்தைகள் காணாமல் போகிற கதையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு 8 நிமிடத்திற்கும் ஒரு குழந்தை இங்கு காணாமல் போவதாக தேசிய குற்றப்பதிவு நிறுவனம் தெரிவிக்கிறது.

மும்பையில், நறுமணத் திரவம் தெளிக்கப்பட்ட ஒரு அறையில் இதர இளம் பெண்களோடு ஒரு பாலியல் தொழிலாளியாக இருப்பவர் 18 வயது ரேஷ்மா. இந்தியாவில் மற்ற பல பெண் குழந்தைகளுக்கு நிகழும் பாலியல் வன்கொடுமை அனுபவங்களிலிருந்து இவரது அனுபவம் ஒன்றும் மாறுபட்டதல்ல. "அப்பாக்களும் அண்ணன் தம்பிகளும் மட்டும் வித்தியாசமானவர்கள் என்று எதை வைத்து சொல்கிறீர்கள்," என்ற அவரது வார்த்தைகளில் அவருக்குக் கிடைத்த கசப்பான வாழ்க்கைக் கல்வி வெளிப்படுகிறது. "அவர்களும் ஆண்கள்தான், இல்லையா" என்று கேட்கிறார் ரேஷ்மா.

சென்னையில் 6 வயது சிறுமியாக இருந்தபோது தனது தாயார் மரணமடைந்ததைத் தொடர்ந்து, மும்பைக்குக் கடத்தப்பட்டவர் ரேஷ்மா. கற்பனை செய்யக்கூடிய எல்லா வழிகளிலும் அவர் வன்புணர்வுகளுக்கு உள்ளாக்கப்பட்டார். அவரது வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் 14 வயதில் ஒரு பாலியல் தொழிற்கூடத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன்பாக, 7 வெவ்வேறு இடங்களில் அவருக்கு "பயிற்சி" அளிக்கப்பட்டது.

ஈவிரக்கமற்ற வன்முறைகளிலிருந்து தப்பிப்பதற்கு ரேஷ்மா கண்டுபிடித்த வழி, மௌனமாக இருப்பதுதான். பின்னர் அவர் தரகனோடும், வேறு சில பெண்களோடும் லண்டன், துபாய், மலேஷியா ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர்கள், நல்ல தொகை பெற்றுக்கொண்டு, 60 அல்லது 75 வயது ஆண்களோடு உறவுகொள்ள கட்டாயப்படுத்தப்பட்டார்கள். உலகத்தில் தன்னைப்போன்ற பாலியல் தொழிலாளிகள் இருப்பதால்தான், ஆண்களின் மட்டரகமான இச்சைகளை தாங்கிக்கொள்கிற மாறுபட்ட வீரர்களாக இருப்பதால்தான் – நாட்டில் உள்ள மற்ற பெண்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று ரேஷ்மா தயக்கமின்றி சொல்கிறார். பிறப்புறுப்புகளில் மிளகாய்ப்பொடி தெளிக்கப்பட்டது, வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்கள் தங்களுக்கு எது வசதி என்று நினைக்கிறார்களோ அதற்கேற்ப இவர்களுடைய கைகளும் கால்களும் கட்டப்பட்டது, தினசரி அடி வாங்கியது, வீட்டுக்குள்ளேயே கருக்கலைப்பு நடந்தது என்று அவரது அறையில் இருக்கிற ஒவ்வொரு பெண்ணுக்கும், அடுத்த பெண்ணை விட பயங்கரமான கதை ஒன்று இருக்கிறது. "மனைவிமார்களாலும், மகள்களாலும் எங்களைப்போல் தாக்குப்பிடிக்க முடியாது," என்கிறார் ரேஷ்மா.

இப்படிப்பட்ட வன்கொடுமை சம்பவங்களின்போது தெருக்களில் நடக்கும் போராட்டங்களில், பெண் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமே ஒரு பாதுகாப்பான ஏற்பாடாகிவிடாது. ஹக் அமைப்பின் பாரதிஅலி, "பெண் காவல் அதிகாரிகளாலும் அடிக்கடி கடுமையான பிரச்சனைகள் ஏற்படுகின்றன," என்று கூறுகிறார். "பொதுவாக அவர்கள் விஷயத்தை மூடி மறைக்கவே விரும்புகிறார்ள். வழக்குப் பதிவு செய்ய மறுக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் மிகக் கொடூரமான அனுபவங்களைச் சந்திக்கிறவர்கள்தான். ஆகவே அவர்களுக்கு மற்றவர்கள்மீது பரிவு கிடையாது" என்கிறார் பாரதி.

பெண் காவலர்கள் பலர் தங்கள் வீடுகளுக்கு தங்களுடைய சீருடையோடு போக அஞ்சுகிறார்கள், ஏனென்றால் அவர்களது வீடுகளுக்குள் அவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும் பாரதி தெரிவிக்கிறார். "சீருடையோடு போனால், ஒரு மணி நேரம் கழித்து அவர்கள் அடிவாங்குவதால் எழுப்புகிற ஓலத்தை அடுத்த வீட்டுக்காரர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள்," என்கிறார் அவர்.

ஆனால், இப்படிப்பட்ட ஏமாற்றங்களும் பாகுபாடுகளும் சமூக வரட்டுத்தனங்களும் மட்டுமே காவல்துறையின் ஒட்டுமொத்த கதையாக எடுத்துக்கொள்வதற்கில்லை. இந்தியாவில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ள பரபரப்பான பல நிகழ்வுகள், காவல்துறையினர் தவறான தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன.

எச்.ஏ.க்யூ அமைப்பைச் சேர்ந்த கங்கூலி, அந்தத் தாக்கங்கள் எப்படி தவறான சிந்தனையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டுகிறார். "குற்றங்கள் நிகழாமல் இருப்பதற்கு காவல்துறையினருக்கு பரிசலிக்கப்படுகிறது. குற்றச் செயல்கள் குறித்து உரிய நேரத்தில் சரியான முறையில் அவர்கள் பதிவு செய்வதையும், தெளிவான எஃப்.ஐ.ஆர். பதிவு செய்வதையும், திறமையான முறையில் புலன்விசாரணை மேற்கொள்வதையும் யாரும் பாராட்டுவதில்லை. பிறகு எப்படி அவர்களுக்கு இதுபோன்ற சம்பவங்களை விசாரிக்கவும் வழக்குத் தொடரவும் ஊக்கம் வரும்? மாறாக அவர்கள் சிக்கல் வேண்டாம் என்று தங்கள் கைகளை உதறிவிட்டு ஒதுங்கிக் கொள்ளவே செய்வார்கள். தங்கள் வட்டாரத்தில் குற்றச் செயல்கள் எதுவும் நடக்கவில்லை என்று காட்டிக்கொள்வார்கள்," என்கிறார் அவர்.

இதில் உள்ள வேறு பிரச்சனைகளை பாரதி அலி எடுத்துக்காட்டுகிறார். "காவல்துறையினருக்கு விழிப்புணர்வூட்டுகிற முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், எத்தனை சட்டங்களும் விதிகளும் எழுதப்பட்டாலும் கூட, குறிப்பிட்ட ஒரு காவல்துறை ஆணையர் எப்படி எடுத்துக்கொள்கிறார் என்பதைப் பொறுத்தே விளைவுகள் அமைகின்றன. உதாரணமாக சம்பந்தப்பட்ட

எல்லோருடனும் மாதாந்திரக் கூட்டங்களை நாங்கள் நடத்திக்கொண்டிருந்தோம். குழந்தை நலக் குழுக்கள், சிறார் நீதி அமைப்புகள், சமூகப் பணியாளர்கள், நீதிபதிகள், காவல்துறையினர் என பலரும் தில்லியின் வெளி மாவட்டத்தில் மாதம் ஒரு முறை சந்தித்து வந்தோம். ஆனால், இப்போது அந்தக் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. ஏனென்றால் தில்லியில் புதிய காவல்துறை ஆணையர் அந்தக் கூட்டங்களால் பயனில்லை என்று நினைக்கிறார்,'' என்று பாரதி அலி கூறுகிறார்.

''நான் ராஜினாமா செய்வதால் பாலியல் வன்கொடுமைக் குற்றங்கள் நின்றுவிடும் என்றால் நான் 1000 முறை ராஜினாமா செய்யத் தயார்,'' என்று தில்லி காவல்துறை ஆணையர் நீரஜ்குமார் கூறுவது சரியாக இருக்கக்கூடும். வன்புணர்வு குற்றத்தைத் தடுப்பது அவரது கைகளில் இல்லாமல் போகலாம். ஆனால், நிச்சயமாக அந்தக் குற்றங்களுக்கான நடவடிக்கைகள் அவர் கைகளில்தான் இருக்கின்றன. அவரும், காவல்துறை அமைப்போடு சேர்ந்த மற்றவர்களும் இதை உள்வாங்கிக்கொண்டு செயல்பட்டாக வேண்டும்.

## குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைத் தடுப்புச் சட்டம்:

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2007ல் மேற்கொண்ட ஒரு ஆய்வு, அந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளில் இரண்டு பேருக்கு ஒரு குழந்தை, பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளானதாக தெரிவித்தது. அந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகளை தடுப்பதற்காக கடந்த ஆண்டு நவம்பரில் நாடாளுமன்றம் ஒரு முக்கியமான சட்டமுன்வரைவை நிறைவேற்றியது.

குழந்தைகளுக்கு ஆபாசமாகப் படங்களைக் காட்டுவது, குழந்தைகளை நிர்வாணமாகப் படம் எடுப்பது, குழந்தைகளை யாரேனும் தனது அந்தரங்க உறுப்புகளைப் பார்க்க வைப்பது போன்ற, குழந்தைகளின் அரியாமையை பயன்படுத்திக்கொண்டு செய்யப்படுகிற அத்துமீறல்களுக்கு தனித்தனியான கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்று குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தடுப்புச் சட்டம் கூறுகிறது. மேலும், சட்டப்பூர்வ நடவடிக்கைகளை குழந்தைகளுக்கு இனக்கமானதாக மாற்றவும் இந்தச் சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வாக்குமூலத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சீருடை அணியாமல் பதிவு செய்ய வேண்டும் (கூடிய வரையில் பெண் அதிகாரியாக இருந்தால் நல்லது), குழந்தை விரும்புகிற இடத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட வழிகாட்டல்கள் சட்டத்தில் உள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் குழந்தைகளை காவல் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது. மேலும், ஒரு குழந்தை பாலியல் வன்கொடுமைக் குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்த எவரேனும், அதுகுறித்து காவல்துறைக்கு தெரிவிக்கத் தவறுவாரானால், அவர் தண்டிக்கப்படலாம், தண்டிக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.



வேறு சில நல்ல அம்சங்களும் சட்டத்தில் உள்ளன. வன்புணர்வு புகார் அளித்துள்ள குழந்தைகளுக்கு சட்ட உதவி வழங்கப்படுவதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது. இதனை, மாநில அளவிலான ஆணையங்களும், குழந்தை நலக் குழுக்களும், பாதுகாப்பு இல்லங்களையும், சிறார் நீதி சட்டத்தின் கீழ் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகிற குழந்தைகளையும் கையாள்வதற்காக அமைக்கப்படும் சட்டப்பூர்வ அமைப்புகளும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இப்படிப்பட்ட வழக்குகளை நடத்த அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார் என்றாலும் கூட, பெற்றோர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அவர்கள் வழக்கு தாக்கல் செய்வதில் உள்ள சோர்வூட்டு நடைமுறைகளை விரும்புவதில்லை. அவர்கள் அச்சுறுத்தப்படுவதையோ, தங்களது குழந்தைகள் நீதிபதியின் முன்னிலையில் திரும்பத் திரும்ப தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளைச் சொல்ல வேண்டியிருப்பதையோ விரும்புவதில்லை.

ஆனால், நடைமுறையில் இவையெல்லாம் மேம்போக்காகவே உள்ளன. பல மாநிலங்களில் மாநில அளவிலான ஆணையம் என்பதே ஏற்படுத்தப்படவில்லை. சட்டத்தை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று கேட்டு அனைத்து மாநில அரசுகளின் செயலர்களுக்கும் மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் அண்மையில் கடிதம் அனுப்பியது. அந்தக் கடிதத்திற்கு ஒடிசா, ஹரியானா ஆகிய இரு மாநிலங்களிலிருந்துதான் பதில் வந்தது. இந்தியாவின் இருண்ட, மிக அசிங்கமான நாசகரமான தொற்று நோயாக, எந்த ஒரு அரசு நிர்வாகமும், பதிலளிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. வேறு பல இந்தியச் சட்டங்களைப் போலவே, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தடுப்புச் சட்டமும் (போஸ்கோ) சட்டமும் ஏதோ ஒரு கற்பனையான அரசு நிர்வாகத்திற்காக ஏற்றப்பட்டது போலவே இருக்கிறது. சட்டத்தின் விதிகள் செயல்படுத்தப்படுமானால் எந்த

அளவிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான், இவ்வாறு பதிலளிக்காமல் இருப்பதில் உள்ள குற்றத்தின் வன்மம் எத்தகையது என்பது புரியும்.

புதுதில்லியின் குழந்தை நலக்குழு முன்னாள் தலைவரும், சக்தி ஷாலினி என்ற தன்னார்வ அமைப்பின் நிறுவனருமான பாரதி சர்மா ஒரு சம்பவத்தைச் சித்தரிக்கிறார். 2007ம் ஆண்டில், ஒரு ஐந்து வயது பெண் குழந்தையை அவளது பெற்றோர் வீட்டில் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். தாய் தனது இரண்டாவது குழந்தையுடன் கிராமத்திற்குப் போய்விட்டார், தந்தை இரவுப் பணிக்காகச் சென்றுவிட்டார். அந்தக் குழந்தையுடன் பக்கத்து வீட்டுப் பெண் தங்குவதாக இருந்தது. ஆனால், அந்தப் பெண் வருவதற்கு சிறிது தாமதமாகிவிட்டது. அந்த குறுகிய நேரத்தில் அப்பகுதியைச் சேர்ந்த இன்னொருவன் வீட்டுக்குள் நுழைந்து அந்தச் சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினான்.

மிகக் கொடூரமான முறையில் அவன் தனது இச்சையைத் தீர்த்துக்கொண்டதால், அந்தச் சிறுமி ஒரு மாதம் காலம் வரையில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற நேர்ந்தது. அந்தப் பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து வேல்டு விஷன் அமைப்பைச் சேர்ந்த ஒரு சமூகப் பணியாளருக்கு தகவல் தெரிவித்தனர். அந்த அமைப்பின் மூலம் காவல் நிலையத்தில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது.

இந்தக் கட்டத்தில்தான் பாரதி சர்மா இதில் தலையிட்டார். எச்.ஏ.க்யூ. அமைப்பைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரை இலவசமாகவே இந்த வழக்கை எடுத்துக்கொள்ளச் செய்தார். அதைத் தொடர்ந்து நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. அந்தச் சிறுமியின் பெற்றோர் அவமான உணர்வுடன் அவளை ஒரு பாதுகாப்பு இல்லத்தில் சேர்த்துவிடலாம் என்றிருந்தனர். ஆனால், குழந்தை நலக் குழுவினரும் அந்த வழக்கறிஞரும் அவர்களிடம் அவ்வாறு செய்ய வேண்டாம் என எடுத்துக்கூறி தடுத்தனர். அந்த வழக்கறிஞர் அடிக்கடி அவர்களது வீட்டிற்குச் சென்று, வழக்கு நடைமுறைகள் பற்றி பொறுமையாக விளக்கினார்.

அரசு வழக்கறிஞருக்கு இப்படியெல்லாம் செய்ய நேரமே இருக்காது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சரியான புரிதலற்றவராக இருந்தார். குழந்தையின் வாக்குமூலத்திற்கு தேதி முடிவு செய்யப்பட்ட போதிலும் கூட அதை அவர் 7 முறை தள்ளி வைத்தார். இதனால், அந்தக் குழந்தை மீண்டும் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வழக்கறிஞர் இதை தில்லி உயர்நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றார். காவல்துறையினரும், மருத்துவர்களும், வழக்கறிஞர்களும் இதை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களை உயர்நீதிமன்றம் ஆணையிடச் செய்தார். வழக்கு முடிவடைவதற்கு மூன்றாண்டுகள் ஆனது. ஆனாலும் குற்றவாளிக்கு பத்தாண்டு சிறைத் தண்டனை கிடைத்தது. அந்தச் சிறுமியின் குடும்பத்தினர் அவளை கைவிட்டுவிடாமல், தங்களுடைய பழைய வீட்டிற்கே திரும்பிச் செல்ல முடிந்தது.

"பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமிகள் பிரச்சனையில் சரியான சட்ட உதவி கிடைப்பது அல்லது கிடைக்காமல் போவது என்பதன் தாக்கத்தை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம். பெரும்பாலும் பெற்றோர்களுக்கு என்ன செய்வது என்று தெரிவதில்லை. அவர்களிடம் போதுமான பணம் இருப்பதில்லை. ஏராளமான மனச்சுமைகளுக்கும் அவர்கள் ஆளாகிறார்கள். இப்படிப்பட்ட சூழல்களில், பாதிக்கப்பட்ட குழந்தையின் வழக்கறிஞரால் அவளது வாழ்க்கைக்கும், அவளது எதிர்காலம் உறிஞ்சப்படுவதற்கும் இடையே சரியான மாற்றத்தை கொண்டுவர முடியும்," என்கிறார் பாரதி ஷர்மா.

ஆனால், அண்மைக்காலத்தில் நிகழ்ந்த பாலியல் கொடுமைகள் தொடர்பாக மக்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது என்றபோதிலும் கூட, இந்த சட்டத்தை செயலக்கத்துடன் நடைமுறைப்படுத்துவதில் அநேகமாக எந்த ஒரு அரசுமே சரியான கவனம் செலுத்தவில்லை.

கடந்த டிசம்பர் 16 அன்று தில்லியில் ஒரு கும்பலால் நடத்தப்பட்ட வன்புணர்வுக் குற்றமும், இந்த வாரம் ஒரு குழந்தைக்கு நேர்ந்த வன்புணர்வு கொடுமையும் தில்லியில் மட்டுமல்லாம் நாடு முழுவதுமே பரவலாக, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு கண்டன இயக்கங்களை தூண்டிவிட்டன. அந்த கண்டன இயக்கங்கள் நிச்சயமாக ஒரு வலுவான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அம்சமாக நிகழ்ந்தன. நாட்டின் மவுனத்தை உடைத்தன. மனசாட்சியை உலுக்கின. சில முக்கிய சட்ட முயற்சிகளுக்கு வழிவகுத்தன. அதே நேரத்தில், அந்த இயக்கங்களில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளும், ஊடகங்கள் மற்றும் அரசியல் அமைப்புகளில் ஏற்பட்ட எதிரொலிகளும் பிரச்சனையை திசை திருப்பக்கூடிய இரண்டு அம்சங்களை முன்வைத்தன. குழந்தை வன்புணர்வுக்கு மரணதண்டனை அளிப்பது, ஆபாசப் படத்திற்கு (போர்னோகிராபி) தடைவிதிப்பது என்ற கோரிக்கைகள்தான் அவை.

ஒரு நாகரீக ஜனநாயக சமுதாயத்தில் மரணதண்டனை கூடாது என்பதற்கான வழக்கமான அறநெறி சார்ந்த, சட்டம் சார்ந்த வாதங்கள் ஒரு புறம் இருக்க, இன்னொரு புறம் குழந்தை வன்முறைக் குற்றத்திற்கு மரண தண்டனை வேண்டுமென கோருவது கிட்டத்தட்ட ஒரு

தற்கொலை முயற்சியாகவே முடியும். பல குடும்பங்கள் தங்களுடைய குழந்தைகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுகிறபோது, மிகுந்த தயக்கத்துடனேயே மவுனத்தை உடைக்க முன்வருகின்றன, "குடும்ப கவுரவம்" என்பதை காப்பாற்றுவதற்காக மவுனமாக இருக்கவே விரும்புகின்றன என்பதை நாம் தொடர்ந்து பார்த்து வந்திருக்கிறோம். ஒரு வேளை சிலரது தகப்பன்கள், சகோதரர்கள், மாமன்மார்கள், சித்தப்பா – பெரியப்பாக்கள் அண்டை வீட்டார் போன்றோர் மரணதண்டனையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றால், எந்த அளவிற்கு அந்த மவுனம் கெட்டிப்படுத்தப்படும், எந்த அளவிற்கு சமூகம் எதிர்வினையாற்றும் என்பதை ஊகித்துப் பாருங்கள். ஆபாசப் படங்களை தடை செய்வது என்கிறப் பிரச்சனை சற்றே சிக்கலானது. ஆனால், இதுவும் பொருத்தமற்றதேயாகும்.

குழந்தைகளுக்கு இப்போது அவர்கள் பயன்படுத்தும் கைபேசிகள், கணினிகள், தொலைக்காட்சிகள் மூலம் வந்து சேருகிற அதிகபட்ச பாலியல் சங்கதிகளோடு சங்கதிகளின் பின்னணியில், ஆபாசப்படம் என்பதை முறைப்படுத்த வேண்டிய தேவைதான் இப்போது இருக்கிறது என்கிறார் பாரதி அலி. "தொலைக்காட்சி அலைவரிசையை மாற்ற வைப்பதற்கு பதிலாக குழந்தைகள் அந்தக் காட்சிகளை, நடிகர்கள் நெருக்கமாக இருப்பதை பார்க்கவிடுவது, நல்லதுதான். அதன்மூலம், பாலியல் என்பது தங்களுக்கு சம்பந்தமில்லாத தனியான ஒரு விஷயம் என்பதாக அல்லாமல் அதில் தங்களுக்குரிய இடத்தை குழந்தைகள் புரிந்துகொள்ள வழி ஏற்படும்," என்று கூறுகிறார் பாரதி அலி.

இணையம் என்பது வருவதற்கு முன்பே ஆபாசப்படம் இருந்து வருகிறது, இனியும் தொடர்ந்து இருக்கும், அதைக் கட்டுப்படுத்துவது சாத்தியமல்ல என்று சமுகப் பணியாளர் ஆஷா சுட்டிக்காட்டுகிறார். 8க்கு 8 அடி அளவே உள்ள சின்னஞ்சிறு பெட்டி போன்ற கூட்டுக்குள் நெரிசலோடு வாழ்ந்துகொண்டிருக்கிற குழந்தைகளுக்கு குழந்தைகளும் பெரியோரும் ஒரே நெருக்கமான இடத்தில் புழங்குகிற சூழலில், பாலியல் செயல் என்பது ஒரு போதும் மறைக்கப்பட்ட விஷயமாக இருக்காது. அந்தரங்கம் என்பதெல்லாம் ஏழைகளுக்கு கட்டுப்படியாகாத ஆடம்பரம்தான் என்று அவர் குறிப்பிடுகிறார்.

பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சிறார் விஷயத்தில் கூட, தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய பொழுதுபோக்கு மையத்திற்கோ அல்லது பாலியல் தொழில் கூடத்திற்கோ பணம் கொடுத்து போவதை விட, அருகில் உள்ள சின்னசிறு பெண் குழந்தையை அச்சுரித்து பணிய வைப்பது இலகுவாக இருக்கிறது எனக் கருதுகிறார்கள் என்று ஆஷா கூறுகிறார்.

இந்தியாவில் வன்புணர்வுக் குற்றத்தின் வேரறுக்க வேண்டும் என்ற நமது லட்சியம் ஒரு ஆழமான தளத்திலிருந்து தொடங்கியாக வேண்டும்.

**ஆதாரம்: Tehelka, 2013 மே 4 இதழில் வெளியாகியுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

## பாலியல் வன்முறை: இந்தியாவில் வருடத்திற்கு 7 லட்சம் சிறுமிகள் பாதிப்பு

இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய அரசின் குழந்தைகள் நலத்துறையானது குழந்தைகள் மீதான பல்வேறு வன்முறை குறித்த விரிவான ஆய்வை சில வருடங்களுக்கு முன்பு மேற்கொண்டது. இந்த ஆய்வில் பதிமூன்று மாநிலங்களில் உள்ள 12 ஆயிரத்து 447 குழந்தைகளிடம் விவரங்கள் பெறப்பட்டன. இவற்றில் 53 சதவிகித குழந்தைகள் ஏதோ ஒரு வகையில் பாலியல் வன்முறைக்கு உள்ளானதாகவும், 219 சதவிகித குழந்தைகள் மோசமான பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அதிர்ச்சி தகவல் கிடைக்கப் பெற்றது.

இதன்படி, இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். மேலும், இவற்றில் விலைமாதர்கள் என கூறப்படுபவர்களில் 15 சதவிகிதம் பேர் பதினைந்து வயதுக்கு குறைவானர்கள் என ஆய்வில் தெரியவந்துள்ளது. இதேபோல், துளிர் எனும் அமைப்பு 2006–ம் ஆண்டு சென்னையைச் சேர்ந்த சிறுமிகள் 2211 பேரிடம் மேற்கொண்ட ஆய்வில் 42 சதவிகிதம் பேர் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. சாக்கி எனும் தொண்டு நிறுவனம் தில்லியில் 350 குழந்தைகளிடம் மேற்கொண்ட ஆய்வில் 63 சதவிகிதம் பேர் குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

**– தீக்கதிர், 2.07.2013**

# பெண்கள் அனைவரும் எங்கே போனார்கள்?

வாணி எஸ். குல்கர்னி, மனோஜ் கே. பாண்டே, ராகவ் கெய்ஹா

கடந்த பத்தாண்டுகளில் ஆண்களைவிட பெண்களும் சிறுவர்களைவிட சிறுமிகளும் சிறப்பாக செயல்பட்டனரா இல்லையா? 2009/10–2011/12 காலகட்டத்தில் வறுமை அதிரடியாக குறைந்துள்ள நிலையில் கருவறையிலிருந்து வாழ்நாள் முழுவதும் பெண்கள் சந்திக்கும் பாகுபாடுகளும் மறுக்கப்படுதலும் பற்றிய ஆழமான கேள்விகள் மறைக்கப்பட்டுள்ளன அல்லது புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அமர்த்தியாசென், பெண்கள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சந்திக்கும் பல வகையிலான இழப்புகளின் தாக்கத்தை ''காணாமல் போன பெண்கள்'' என்ற குறியீட்டின் மூலம் குறிப்பிட விரும்புகிறார். பெண்கள் அதிகளவில் உயிரிழப்பது மற்றும் பெண்களின் உண்மையான எண்ணிக்கை மற்றும் உணவு, சுகாதாரம் ஆகியவற்றில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் இல்லாத நிலையில் நாம் எதிர்பார்க்கும் பெண்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கு இடையே உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்வது இந்த குறியீட்டின் நோக்கம். முதலில், 1000 ஆண்களுக்கு எவ்வளவு பெண்கள் இருக்க வேண்டும் என்ற பாலின விகிதத்திற்கும் உண்மையான பாலின விகிதத்திற்கும் உள்ள வித்தியாசம் கணக்கெடுக்கப்படும். அந்த எண்ணிக்கையை ஆண்களின் எண்ணிக்கையோடு பெருக்கினால் காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை கிடைக்கும். இது மிகச் சரியான கணக்காகும். உயிருடன் இருக்கும் பெண்களின் எண்ணிக்கையில் காணாமல் போன பெண்களின் எண்ணிக்கையை வகுத்தால் ஒப்பீட்டளவிலான கணக்கு கிடைக்கும். அதே முறையில் காணாமல் போன பெண்கள் மற்றும் சிறுமிகளின் மிகச் சரியான மற்றும் ஒப்பீட்டளவிலான மதிப்பீடுகள் கணக்கிடப்படுகிறது.

இந்தியாவில் 1980களில் காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை 37 மில்லியன் (370 லட்சம்) ஆகும். உலக அளவிலான காணாமல் போன பெண்களின் மொத்த எண்ணிக்கை 100 மில்லியன்களுக்கும் அதிகம். தேர்வு செய்யப்பட்ட சில நாடுகளில் உள்ள மொத்த எண்ணிக்கையான 60 மில்லியனில் இந்த மதிப்பீடு குறைவானதாக உள்ள (23 மில்லியன்) இந்தியாவில் மிகச் சமீபத்திய மதிப்பீடுகளின்படி காணாமல்போன பெண்களின் எண்ணிக்கை மிக அதிகம். வேறுபாடுகள் அதிகம் என்பதைவிட ''இறப்பு விகிதத்தில் உள்ள பாலின பாகுபாடு ஆச்சரியப்படும் வகையில் அதிகமான எண்ணிக்கையில் உள்ளது. (சென், 2003) என்பதுதான் கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்தாகும்.

இந்தியாவில் பாலின விகிதம், 2001ல் இருந்த 1000 ஆண்களுக்கு 932.91 பெண்கள் என்பதிலிருந்து 2011ல் 940.27 என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. பத்தாண்டுகளில் இந்த வளர்ச்சி 0.70 சதவீதமாகும். Dr. சென் பயன்படுத்திய அதேமுறையைப் பயன்படுத்தி, நாம் செய்த மதிப்பீட்டின்படி காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை 2001ல் 46.35 மில்லியன் என்பதிலிருந்து 2011ல் 49.73 மில்லியனாக ஆகி 3.38 மில்லியன் உயர்ந்துள்ளது. இந்த பத்தாண்டு கால உயர்வு 7.30 சதவீதம் ஆகும். பாலின விகிதம் மற்றும் உண்மையான பெண்களின் எண்ணிக்கை இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டையும் ஆண்களின் எண்ணிக்கையையும் கொண்டு, காணாமல் போன பெண்களின் எண்ணிக்கைக் கணக்கிடப்படுவதால், இந்த விகிதாச்சாரங்களுக்கு இடையில் உள்ள வேறுபாடு, மிக அதிக அளவிளான ஆண்களின் எண்ணிக்கையால் ஈடுகட்டப்படுகிறது. எனினும், உயிருடன் இருக்கும் பெண்களின் எண்ணிக்கையில் 2001ல் 9.33 சதவீதத்திலிருந்து 8.48 சதவீதமாக குறைந்துள்ளது. அதாவது பத்தாண்டுகாலத்தில் 9.17 சதவீதம் குறைந்துள்ளது.

### கிராமப்புற மற்றும் நகர்ப்புற நிலைமை:

காணாமல் போன பெண்களில் கிராமப்புறப் பெண்கள் எவ்வளவு நகர்ப்புறப் பெண்கள் எவ்வளவு என்று பிரித்தால் சுவாரஸ்யமான தகவல் கிடைக்கின்றது. கிராமப்புறங்களில் பாலின விகிதம் சிறிதளவு உயர்ந்துள்ளது. அதாவது, 2001ல் 946, 2011ல் 947. காணாமல் போன பெண்களின் மிகச் சரியான எண்ணிக்கை 28.35 மில்லியனிலிருந்து 31.30 மில்லியனாக அதாவது 2.95 மில்லியன் (29.50 லட்சம்) உயர்ந்துள்ளது. இதிலிருந்து இந்த பத்தாண்டுகளில் 10.40 சதவீதம் உயர்ந்துள்ளது. எனினும், காணாமல் போன பெண்களின் பங்கு 7.9 சதவீதத்திலிருந்து 7.7 சதவீதமாக

குறைந்துள்ளது. இது இந்த பத்தாண்டுகளில் 2.53 சதவீதமாகும். நகர்ப்புறப் பகுதிகளில் பாலின விகிதம் 2001ல் 900த்திலிருந்து 2011ல் 926ஆக உயர்ந்து, இந்த பத்தாண்டுகளில் 2.89 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆனாலும், காணாமல் போன பெண்களின் சரியான எண்ணிக்கை 18 மில்லியனிலிருந்து 18.42 மில்லியனாக சிறிதளவு உயர்ந்துள்ளது, பத்தாண்டு காலத்தில் 2.33 சதவீதமாக உயர்ந்துள்ளது. எனினும், காணாமல் போன பெண்களின் பங்கு 13.3 சதவீதத்திலிருந்து 10.20 சதவீதமாக, பத்தாண்டு காலத்தில் 23.30 சதவீதமாக குறைந்துள்ளது. இது கிராமப்புறங்களில் குறைந்துள்ளதைவிட அதிகம்.

6 வயதிற்குக் குறைவான பெண் குழந்தைகளின் பாலின விகிதம் (சிறுமிகள் / 1000 சிறுவர்கள்). 2001ல் 927லிருந்து 2011ல் 914ஆக குறைந்துள்ளது, பத்தாண்டு கால குறைவு 1.40 சதவீதம். காணாமல் போன சிறுமிகளின் எண்ணிக்கை 2001ல் 2.13 மில்லியனிலிருந்து 2011ல் 3.16 மில்லியனாக, பத்தாண்டு காலத்தில் 48.36 சதவீதம் உயர்ந்துள்ளது. உயிருடன் இருக்கும் சிறுமிகளில் காணாமல் போன சிறுமிகளின் பங்கு 2.7 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதமாக, 55.55 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த பத்தாண்டுகளில் காணாமல் போன சிறுமிகளின் மிகச் சரியான மற்றும் ஒப்பீட்டளவிலான எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதாவது, சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடு (தவறான எண்ணம்) மிகக் கூர்மையாக வெளிப்படுவது அபாயகரமானது.

கிராமப்புறப் பகுதிகளில் பாலின விகிதம் 2001ல் 934ல் இருந்து 2011ல் 919ஆக குறைந்துள்ளது, பத்தாண்டு கால குறைவு 1.60 சதவீதம். காணாமல் போன சிறுமிகளின் எண்ணிக்கை 1.23 மில்லியனிலிருந்து 2.07 மில்லியனாக, பத்தாண்டு காலத்தில் 68.29 சதவீதமாக உயர்ந்துள்ளது. காணாமல் போன சிறுமிகளின் பங்கு 2.0 சதவீதத்திலிருந்து 3.7 சதவீதமாக, 85 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த புள்ளி விவரங்கள் அனைத்திந்திய அளவிலான விவரங்களைவிட அதிகமாக உள்ளதால், கிராமப்புறங்களில் ஏற்கெனவே நிலவும் தீவிரமான பாலின தெரிவு பாகுபாடு மிக வேகமாக வளர்ந்துள்ளது என்று கருதலாம்.

2001 மற்றும் 2011ம் ஆண்டிற்கான அரசின் தகவல்களின் மூலம் பெண்கள் காணாமல் போவதற்கு காரணமான பெண்களுக்கு எதிரான பாகுபாட்டில் நிலவும் சில முக்கிய காரணிகளை எங்களது ஆய்வு அலசுகிறது. குறிப்பிடத்தகுந்த அளவு பாலின சமத்துவமின்மை வேகமாக வளர்ந்துள்ள சில மாநிலங்களில் (ஹரியானா, ராஜஸ்தான், குஜராத், தில்லி, மகாராஷ்டிரா), அதிக வருமானம் ஈட்டும் பெண்களில் காணாமல் போன பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது ஆச்சர்யமான விஷயம் அல்ல. பெண் கல்வி அதிகம் உள்ள மாநிலங்களில் காணாமல் போன பெண்களின் பங்கு குறைவாக உள்ளது. இந்த மாநிலங்களில் ஆண் தொழிலாளர்களைவிட அதிக சதவீத பெண் தொழிலாளர்கள் உள்ளனர். பெண்கள் அதிகாரத்துவத்திற்கு இது ஒரு அளவுகோலாக அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது. வயது வந்த பெண்களில் (15 முதல் 59 வயது வரை) ஒரு பங்கினர் காணாமல் போன பெண்களின் பங்கை அதிகரித்தனர். திருமணமான பெண்களின் இறப்பு விகிதம் அதிகரித்தது இதற்கு காரணமாக இருக்கலாம்.

காணாமல் போன பெண்களில் மிக அதிகமான பகுதியினர் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினராகும். பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க காணாமல் போன பெண்களின் பங்கு அதிகரிக்கிறது. காணாமல் போன பெண்களின் பங்கில் வட–தென் மாநிலங்கள் பிரிவு நிலவுகிறது. அதாவது, வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் தென் பகுதியைவிட இந்த நிலை மோசமாக இருக்கிறது. பெண்களுக்கு ஆதரவான சட்டங்கள் நிலவினாலும் பெண் அல்லது ஆணாதிக்க சமூகமாக இருந்தாலும் இத்தகைய வேறுபாடு நிலவுகிறது. இறுதியாக காணாமல் போன பெண்களின் பங்கு குறைவதற்கு ஊடக வெளிப்பாடுகளும் குறிப்பிட்ட அளவு காரணமாக இருந்துள்ளது. குழந்தை பாலின விகிதம் இரண்டு காரணங்களைச் சார்ந்துள்ளது: பிறப்பு பாலின விகிதம் மற்றும் பிறக்காத குழந்தைகளில் பாலின மரண விகிதம். பெண் கருக்கலைப்பைத் தடுப்பதால் பிறப்பு பாலின விகிதத்தில் ஆண் தன்மை குறைகிறது. இவ்வாறு செய்வதால் தேவைப்படாத பெண் கருக்கள் சத்தான உணவும் சுகாதாரமும் மறுக்கப்பட்ட சிறுமிகளாக வளர்வார்கள்.

**பாலின தேர்வு:**

1994ல் இருந்து கருக்கலைப்பில் பாலின தேர்வு இந்தியாவில் சட்டவிரோதமானதாகும். – கருவுருவதற்கு முன்பு மற்றும் கருவுற்ற பின் (பாலின தேர்வு தடை) சட்டம் 1994, 1996ல் நடைமுறைக்கு வந்தது, பாலின தேர்வு கருக்கலைப்பு நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரமாகும். ஒரு பெண்ணிற்கு அதிக அளவிலான பெண் குழந்தைகள் இருந்தால் ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்ற விருப்பம் இருக்கும் என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. ஏற்கெனவே, ஒரு குழந்தை இருக்கும் குடம்பங்களில் முதல் குழந்தை ஆணாக இருந்தால், இரண்டாவது குழந்தை பெண்ணாக இருப்பதற்கான

சாத்தியம் 0.515 அதுவே முதல் குழந்தை பெண்ணாக இருந்தால், இரண்டாவது பெண்ணாக இருப்பதற்கான சாத்தியம் வெறும் 0.422. சில யூகங்களின்படி ஆண்டுதோறும் 0.5 மில்லியன் பாலின தேர்வு கருக்கலைப்புகள் நடைபெறுகின்றது. பிற சமீபத்திய மதிப்பீடுகள் அதிகமாக உள்ளது (2011ல் 0.62 மில்லியன் அல்லது பதிவு பெறாத மையங்களில், பயிற்சி பெறாதவர்களால், சுகாதாரமற்ற நிலையில் பெருமளவிற்கு நடத்தப்படும் கருக்கலைப்புகள் உள்ளிட்ட 60 லட்சத்திற்கும் அதிகம்). பிரசவ மரணங்களில் சுமார் 8 சதவீதம் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் நிகழ்கிறது. ஆக மொத்தம், கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூக கூட்டமைப்புகள் மூலமான பெண்களின் அதிகாரத்துவம் பாகுபாடுகளுக்கு எதிராக அவர்கள் குரல் கொடுக்க காரணமாக உள்ளது. அதிகமான ஊடக வெளிப்பாடு, பெண்களின் உரிமை மீறல்களுக்கு தண்டனை அளிக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆகியவை இந்த அவலம் குறைவதற்கு முக்கிய தேவையாகும். படித்த பெண்களும் ஆண் குழந்தை தேர்வுக்கே முக்கியத்துவம் அளிப்பதால் இந்தியாவில் ஆண் குழந்தை தேர்விலிருந்து மீண்டு வருவது மிகப்பெரிய சவாலாக உள்ளது. தவிர ஆச்சரியப்படும் வகையில் பாலின சமத்துவமின்மை உள்ள மாநிலங்களின் மிக அதிகமான வளர்ச்சி, அனைத்து வடிவிலான இழப்புகளுக்கும் காரணமாக இருந்தால் அது, பெண்கள் காணாமல் போகும் இந்த விஷயத்தை இன்னும் மோசமாக்கும்.

படித்த பெண்களும் ஆண் குழந்தை தேர்வுக்கே முக்கியத்துவம் அளிப்பதால் இந்தியாவில் குழந்தை தேர்விலிருந்து மீண்டு வருவது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

(வாணி எஸ். குல்கர்னி, ஏல் பல்கலைக் கழகத்தில் சமூகவியலில் துணை ஆய்வாளராக உள்ளார். மனோஜ்கே. பாண்டே ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பயில்கிறார். ராகவ் கெய்ஹா, பொது சுகாதாரத்திற்கான ஹார்வேர்டு பள்ளியில் உலகளாவிய சுகாதாரம் மற்றும் மக்கள் தொகை துறையில் விஞ்ஞானியாக உள்ளார்.)

**– ஆதாரம்: ‘தி ஹிண்டு’ 20 ஆகஸ்ட் 2013**

## குழந்தை திருமணங்களில் முன்னிலை வகிக்கும் இந்தியா: ஐ.நா. அறிக்கை

இந்தியாவில் ஒவ்வொரு இரண்டாவது பெண் குழந்தைக்கும் குறைந்த வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் மக்கள் நிதி (யு.என்.எஃப்.பி.ஏ.) அமைப்பு கூறியுள்ளது. உலக அளவில் குழந்தைத் திருமணங்கள் நடைபெறும் வடிவங்கள் குறித்த அந்த அமைப்பின் சமீபத்திய மதிப்பீடு, பொதுவாக தடை செய்யப்பட்டுள்ள ஆனால், இப்போதும் தொடர்கிற ஒரு நடைமுறைக் குறித்த ஒரு கவலை தரும் சித்திரத்தை முன் வைக்கிறது.

உலகிலேயே குழந்தை மணமகள்கள் அதிகமாக இருப்பது இந்தியாவில்தான். 47 சதவீத பெண் குழந்தைகள் சட்டப்பூர்வ வயதான 18 வயதிற்குக் கீழ் இருக்கும்போதே திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள். 2011 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் பெருபாலான வளரும் நாடுகளில் 14 கோடி குழந்தைத் திருமணங்கள் நடக்கக்கூடும் என்று டி.என்.எஃப்.பி.ஏ. கூறியுள்ளது. அதாவது, சராசரியாக ஒவ்வொரு நாளும் 39,000 குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் சட்டங்களை வலுப்படுத்துவது குறித்து இந்தியா விவாதித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், உலகப் பெண்கள் தினத்தன்று, இந்த அதிர்ச்சிப் புள்ளி விவரம் வெளி வந்துள்ளது.

பரிசீலிக்கப்பட்டு வரும் ஆலோசனைகளில் ஒன்று, திருமணம் ஆகியிருந்தாலும் இல்லாவிட்டாலும் சம்மதத்துடன் கூடிய பாலியல் உறவுக்கான வயதை 18 என்பதிலிருந்து 16 என குறைக்க வேண்டும் என்பதாகும். ‘‘ஈவிரக்கமற்ற ஒரு மனித உரிமை மீறல்தான் குழந்தைத் திருமணம். இது பெண் குழந்தைகளின் கல்வியையும் உடல் நலத்தையும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளையும் தட்டிப்பறிக்கிறது,’’ என்கிறார் யு.என்.எஃப்.பி.ஏ. செயல் இயக்குநர் பாபதுண்டே ஒசோட்டிமெஹின். 2020ம் ஆண்டு வாக்கில், 18 வயதிற்குக் குறைந்த 14 கோடி பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடந்திருக்கும்; அவர்களில் 5 கோடி பேர் 15 வயதிற்கும் குறைந்தவர்களாக இருப்பார்கள் என்றும் யு.என்.எஃப்.பி.ஏ. தெரிவித்துள்ளது. யு.என்.எஃப்.பி.ஏ. அறிக்கையின்படி, குழந்தைத் திருமணங்கள் மிக அதிகமாக நடைபெறும் 10 நாடுகள் வருமாறு: நைஜர் (75%), சாட் (68%), மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு (68%), பங்களாதேஷ் (66%), கினியா (63%), மொசாம்பிக் (56%), மாலி (55%), பர்க்கினா ஃபாஸ்கோ மற்றும் தெற்கு சூடான் (52%), மலாவி (50%).

**ஆதாரம்: http://www.thehindu.com**

# கரும்பலகை இல்லாமல் 25% பள்ளிகள் : ஒரு ஆய்வு

– எம். ரம்யா

***75 சதவீதத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் மேசை, நாற்காலி, பெஞ்ச் போன்ற வசதிகள் இல்லை என்பதையும், 41 சதவீத பள்ளிகளில் மாணவர்களுக்கு திறந்தவெளியில்தான் பாடம் நடத்தப்படுகிறது என்பதையும் 'க்ரை' அமைப்பின் ஆய்வு தெரிவிக்கிறது.***

சில வகுப்பறைகளுக்குள் நவீன டேப்லட்டுகளும், ஸ்மார்ட் ஸ்கிரீன்களும் நுழைந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் இந்தியாவின் கிட்டத்தட்ட கால்வாசிப் பள்ளிகளில் கரும்பலகைகள் கிடையாது.

குழந்தை நிவாரணம் மற்றும் நீங்கள் (CRY) என்ற அரசுசாரா அமைப்பு 'கற்றல் தடைகள்' என்ற தலைப்பில் மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தியது. நாட்டிலுள்ள பல தொடக்கப் பள்ளிகளிலும், அதற்கு மேற்பட்ட பள்ளிகளிலும் ஒரு கல்வி நிறுவனத்தில் எதிர்பார்க்கக் கூடிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்பதை அந்த ஆய்வு காட்டுகிறது. தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட 13 மாநிலங்களில், 71 மாவட்டங்களையும், தில்லி, கொல்கத்தா, சென்னை ஆகிய மூன்று பெரு நகரங்களையும் சார்ந்த 750 பள்ளிகளில் அந்த ஆய்வு நடத்தப்பட்டது. ''பள்ளிக் கல்வி என்பது கரும்பலகையோடு இணைந்ததுதான். கரும்பலகை இல்லாத கல்வி என்பதை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது,'' என்கிறார் 'க்ரை' அமைப்பின் கொள்கை, ஆய்வு, பிரச்சாரம், ஆவணப்படுத்தல் பிரிவு இயக்குநர் விஜயலட்சுமி அரோரா.

75 சதவீதத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் மேசை, நாற்காலி, பெஞ்ச் போன்ற வசதிகள் இல்லை என்பதையும், 41 சதவீத பள்ளிகளில் மாணவர்களுக்கு திறந்தவெளியில்தான் பாடம் நடத்தப்படுகிறது என்பதையும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது. வகுப்பறைகளில் மோசமான நிலைமை, போதுமான ஆசிரியர்களும் வகுப்பறைகளும் இல்லாத நிலைமை போன்றவை, வகுப்பறைக்கு வெளியே பாடம் நடத்தப்படுவதற்கான காரணங்களாக இருக்கக்கூடும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். பல பள்ளிகளில் சுற்றுச்சுவர் இல்லை என்கிற நிலையில், வகுப்பறைக்கு வெளியே பாடம் நடத்துவது என்பது பாடம் நடக்கும்போதே குழந்தைகளின் கவனத்தைத் திருப்புவதாகவும், தொந்தரவு ஏற்படுத்துவதாகவும் அமையக்கூடும். நமது பள்ளிகளின் சுகாதார நிலைமை மோசமாக இருப்பதையும் அந்த ஆய்வு காட்டுகிறது. 11 சதவீத பள்ளிகளில் கழிப்பறை வசதி கிடையாது. 34 சதவீத பள்ளிகளில் கழிப்பறை இருந்தாலும் அது பயன்படுத்தத் தக்கதாக இல்லை. கிட்டத்தட்ட இரண்டில் ஒரு பள்ளிகளில் கழிப்பறைக்கு அருகே தண்ணீர் வசதி கிடையாது. வடமாநிலங்களில் கிட்டத்தட்ட 70 சதவீத பள்ளிகளில் கழிப்பறைக்கு அருகே தண்ணீர் வசதி இல்லை. அரைவாசிப் பள்ளிகளில், கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு குழந்தைகள் தங்கள் கை, கால்களை கழுவிக்கொள்ள, கழிப்பறைக்கு அருகில் சோப் வைத்திருக்கப்படவில்லை. வயிற்றுப் போக்கு போன்ற பாதிப்புகள் குழந்தைகளுக்கு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த கழிப்பறை பயன்பாட்டிற்குப் பிறகு கை கழுவுவது முக்கியம் என்று சுகாதார வல்லுநர்கள் வலியுறுத்துகிறார்கள்.

80 சதவீத பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்ய துப்புரவுப் பணியாளர்கள் இல்லை என்பது இந்த ஆய்வில் தெரிய வரும் மற்றொரு கவலை தரும் அம்சமாகும். பழங்குடி சமூக குழந்தைகள் பெருமளவுக்கு உள்ள பள்ளிகளில் 7 சதவீத பள்ளிகள் மட்டுமே துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டிருக்கின்றன. ''துப்புரவுப் பணியாளர்கள் இல்லை என்பது, சுகாதாரமற்ற சூழலில் பயில்வதற்குக் குழந்தைகள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல், சுத்தம் செய்கிற வேலை குழந்தைகளிடமே தரப்படுகிறது என்பதையும் இது காட்டுகிறது. இந்த வேலைகள் குழந்தைகளின் சமூகப் பின்னணி அடிப்படையில் தரப்படுவதையும் அனுபவங்கள் காட்டுகின்றன,'' என்று 'க்ரை' அமைப்பு கூறுகிறது.

நாடு முழுவதும் சுமார் 44 சதவீத பள்ளிகளில் மின்சார வசதி கிடையாது. குறிப்பாக கிழக்கு மாநிலங்களில், 74 சதவீத பள்ளிகளில் மின்சார இணைப்பு கிடையாது. ''பள்ளிகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படுவது, முற்றிலும் புதிய வாய்ப்புகள் நிறைந்த ஒரு உலகத்தைத் திறந்துவிடும். வகுப்பறைகள் வெளிச்சத்துடன் இருக்கும், குழந்தைகள் வசதியாக இருக்க முடியும் என்பது மட்டுமல்லாமல் கணினி சார்ந்த, இணையத் தொடர்புகள்

கல்விக்கும் இது உதவியாக அமையும்,'' என்று 'க்ரை' அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டின் கட்டாய இலவச கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்த பிறகுகூட, நாடு முழுவதும் பல பள்ளிகளில் சட்டப்பூர்வ கட்டாயத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.

**பற்றாக்குறைகள்:**

- 11 சதவீத பள்ளிகளில் கழிப்பறை இல்லை
- 49 சதவீத பள்ளிகளில் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுவான கழிப்பறைகளே உள்ளன
- 20 சதவீத பள்ளிகளில் குடிநீர் இல்லை
- 18 சதவீத பள்ளிகளில் மதிய உணவு தயாரிப்பதற்கான தனி சமையல் கூடம் இல்லை
- 74 சதவீத பள்ளிகளில் நூலகம் கிடையாது
- 60 சதவீத பள்ளிகளில் விளையாட்டு மைதானம் இல்லை
- 66 சதவீத பள்ளிகள், மாணவர்களின் முந்தைய பள்ளி விவரங்கள் குறித்த ஆதாரங்கள் வேண்டும் என கட்டாயப்படுத்தின; 46 சதவீத பள்ளிகள் மாற்றுச் சான்றிதழ் வேண்டும் என வற்புறுத்தின.
- 21 சதவீத தொடக்கப்பள்ளிகளிலும், 17 சதவீத தொடக்க நிலைக்கு மேற்பட்ட பள்ளிகளிலும் ஆசிரியர்கள் கற்பித்தல் பணி அல்லாத வேறு வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.
- 28 சதவீத தொடக்கப் பள்ளிகளிலும் 31 சதவீத தொடக்க நிலைக்கு மேற்பட்ட பள்ளிகளிலும் முதல்வர்கள் இல்லை.

**Source: Times of India, Aug 19, 2013**


Source: http://sathiyam.tv/english/districts/

*For Private Circulation Only*




**Source: Rights education and development centre**
**E-mail: ksamy2005@gmail.com Website: www.readindia.org.in**


*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**



*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*